M. 1630. FEBRUARY & MARCH 1924.

சுயம்பிரகாசத்துணை.

ஸம்ஷ ல் மஹறிபா என்னும்

20 NOV 1924

# ஞான சூரியன்

இது ஒரு நிகரில்லாத இனிய மாத சஞ்சிகை.

# GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 2.] | உருத்திரோற்கா்ரீஸ்ரீ மாசிமீ பங்குனிமீ 1௨ | [இதழ் 11, 12.

Vol. II. No. 11, 12.

பொருளடக்கம்.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள் வணக்கம் | 241 |
| அடியார் தேரிசனப்பலன்—வேதாந்தபாஸ்கரன் 2-ம்பாகம் | 242 |
| சீடரிலக்கணம்—வேதாந்தபாஸ்கரன் | 244 |
| ஐம்பெரும்பவங்கள்—ஆ. வ. பதுமநாப பிள்ளை ஆரியூர் | 248 |
| புத்தகம்—S. குருசாமி முதலியார் திருச்சி | 254 |
| சுதேசி—S. குருசாமி முதலியார் திருச்சி | 257 |
| சங்கீதம்—ஞானக்களஞ்சியம் | 259 |
| எண்வகைப் பிராணாயாமம்—யோகாகசியம் | 266 |
| சாதிமத சங்கடம்—ஞானக்களஞ்சியம் | 281 |
| ஞான சூரியன் முடிவுரை—பத்திராதிபர் | 287 |
| மஹாகுருவணக்கம்—மணிமுத்துநாயகம் | 288 |
| மவுலா இஸ்லாம்—உண்மையுரைப்போன் | 289 |

த்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி
எவரும் பிரசுரிக் ருகரல்லர்.

# "ஞா ன சூ ரி ய ன்"

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ. 1—8—0 |
| பிணங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ. 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ. 0—3—0 |

மாதிரிப்பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனமாக அனுப்பப்படும்

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி பி.யிலனுப்பம்படி ஆர்டர்செய்யலாமேனும் முன்பணம் அனுப்பிவிடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரைமீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு | ... | ரூபா | 7—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 4—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 2—8—0 |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ வீதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும். நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

## வி ஷ ய ங் க ள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றைவெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு. பதில் தெரிய விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவும்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனமாக அனுப்புவதுடன அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.


கருணையானந்த ஞானபூபதி,

பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம், திருவ

சுயம்பிரகாசத் துணை.

# ஞானசூரியன்.

## இது ஒரு சிறந்த மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ்வேதம்)

(All Rights Reserved.)


| | | |
|---|---|---|
| மலர் 2. | உருத்திரோற்காரி-ஸு<br>மாசிமீ பங்குனிமீ | இதழ்<br>11, 12. |


### கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
　　தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
　　நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
　　நலிந்தவ ருளமலர் விரியச்
சோணைபோ லருள்செய் சுயம்பிர காசச்
　　சோதியைப் போதெலாந் தொழுவாம்.

### சற்குருவணக்கம்.

முத்தமிழ்வா ரிதிமடுத்த முகிலே வேத
　　முடிவேகின் மயவடிவே முனமோர் நாளில்
சித்துருவைத் தத்துவமாய்க் காட்டி நாயேன்
　　றிகைக்கும்வண முருக்காந்த தேவே யோக
சித்தர்களும் பெறற்கரிய பதத்தில் வாழும்
　　செல்வமே புலவர்கள்நா யகப்பேர் சேர்ந்த
அத்துவிதப் பெருஞ்சோதி மலையே ஞான
　　அப்துர்றகு மானொளியே அகண்ட வாழ்வே.

(பத்திரிகாசிரியர்.)

# ஞானசூரியன்

## இது ஒரு நிகரில்லாத மாத சஞ்சிகை.

### அடியார் தெரிசனப் பலன்.

மகானுபாவர்களாகிய மெஞ்ஞானிகளைத் தரிசித்த மாத்திரத்திலேயே தலைமுறை தலைமுறையாகச் செய்த அனேககோடி பாவங்களெல்லாம் நெருப்புப்பட்ட பஞ்சு மூட்டையைப்போல் ஒரு கணநேரத்தில் நசிக்குமென்றும் அளவற்ற நன்மைகளுண்டாகுமென்றும் உபநிடதங்கள் பேரோலமிட்டு முழங்கிக்கொண்டிருக்கின்றன.

"பெரியவர் தந்தரிசனத்தாற் பெறுதபொருளொன்றுண்டோ" எனக்கூறிய ஆன்றோர் அமுதவாக்கியமே போதுமான சாட்சியாகும்.

ஒரு காலத்தில் அகத்திய மகாமுனிவரானவர் தனது குரு மூர்த்தியாகிய முருகக்கடவுளை நோக்கி, 'சுவாமி! மகான்களை தரிசிப்பதற்காக அனேககோடி சனங்கள் பலதிசைகளிலுமிருந்து வருகின்றார்களே! மகான்களைத் தரிசிப்பதனால் அவர்களுக்கு என்ன பலன் கிடைக்கும்? அதை அடியேனுக்குத் திருவாய் மலர்ந்தருளவேண்டும், என்று கேட்டார். அப்போது சுப்பிரமணியர் அகஸ்தியரை நோக்கி, 'இதோ மலத்தை உருட்டியிழுத்துச்செல்கின்ற வண்டினிடத்திற்போய் உன் அபிப்பிராயத்தைச்சொன்னால், அதற்கு பதில் அவ்வண்டு சொல்லும்' என்றனர். மலத்தை உருட்டிப்போகின்ற வண்டினிடத்திற் கேட்கச்சொன்னது தனக்குச் சமாதானமாயில்லாவிட்டாலும்

குருவாக்காகிய திருவாக்குக்கு மறுவாக்கின்றி அங்ஙனமேசென்று 'ஹே! வண்டே! மகான்களைத் தெரிசிப்பதனால் என்ன பலன்' என்று கேட்டார். அது மறுமொழி சொல்லாமலே இறந்து விட்டது. இஃதென்ன ஆச்சரியமாயிருக்கிறது நாம் கேட்ட வினாவிற்குவிடைபகராமல் உயிர்துறந்துவிட்டதேயென்றெண்ணி தனது குருபிரானிடத்தில் நடந்தவைகளைச் சொன்னார். அதைக் கேட்ட வேலவர், 'அது இறந்துபோனால் போகட்டும் அதோ தெரிகிற பசுமந்தையில் ஆயிரம் பசுக்களுக்கு மேலானதும் விசேஷ அழகுபொருந்தியதுமாகிய ஓர்பசு நிற்கிறது. அதனிடத் திற்போய்க்கேள்' என்றார். அப்படியே போய்க் கேட்க அந்தப் பசுவும் பதிற்கூறாமல் இறந்துவிட்டது. அப்புறம் ஓர் அரச குமாரத்தி கையிலிருக்கும் கிளிப்பிள்ளையைக் கேட்கச்சொன் னார். அதனிடத்திற் போய்க்கேட்க விடைதாராமல் அந்தக் கிளி யும் இறந்துவிட்டது. அதன்பின் ஓர் அரசனுக்கு வெகுகால மாக குழந்தையில்லாமலிருந்தது. அனேககோடி அடியார் களுக்குச் செய்த தருமங்களின் புண்ணியத்தினாலும், காசி, இராமேச்சுரம் முதலிய புண்ணியஸ்தல யாத்திரை செய்து மூர்த்தி தரிசனஞ்செய்த தபோபலத்தினாலும் கோடி சூரியன் ஒன்று சேர்ந்து ஒரு சூரியனைப் பிறப்பதுபோல் ஞான சூரிய னாக ஓர் குழந்தை அவதரிக்கப்போகிறது. அந்தக் குழந்தை பிறந்தவுடன் பொற்றாம்பாளத்தில் ஏந்திவரச்செய்து கேட்பா யாகில் உன் வினாவிற்குச்சரியான விடை பகருமென்று உறுதி கூறினார். அங்ஙனமே சென்று அக் குழந்தையை நோக்கி, 'குழந்தாய்! மகான்களைத் தரிசிப்பதால் என்ன பலன்?' என்று கேட்டார். அப்போது குழந்தை முனீச்சுரரை நோக்கிச்சொல்லு கிறது. முக்காலங்களுமுணர்ந்த தேவரீருக்குத்தெரியாதகாரியங் கள் மூவுலகங்களிலுமில்லை. ஆயினும் தேவரீர் வினாவிற்கு அடியேன் விடைசொல்லவேண்டிய கடமையுடையவனாக இருப் பதால் நான் சொல்லுகிறேன் கேளும்.

'முன் மலத்தை உருட்டி யிழுத்துச்சென்ற வண்டானது நான்தான். அந்த சென்மத்தில் மகானாகிய தேவரீருடைய

தெரிசனம் எனக்குக் கிடைத்தது. அதனால் அந்த இழிவான ஜனனம் நீங்கி அதற்கு மேலான சிறந்த பசுவாகப் பிறந்தேன். அந்த சென்மத்திலும் தங்களைத் தெரிசித்தேன். அதனுடைய பலனால் இராசகுமாரத்தி கையில் தாங்கியிருக்கப்பெற்ற பசிய கிளியாக அவதரித்தேன் அந்த சென்மத்திலும் தங்களுடைய தெரிசனம் எனக்குக் கிடைத்தது. அதனால் பூலோகத்தை அரசாட்சி செய்யும் அரசர்களுக்கு அதிபதியான ஓர் சக்கிரவர்த்தி வீட்டில் செனித்தேன். இந்த சென்மத்திலும் தங்களுடைய தெரிசனம் கிடைக்கப்பெற்றேன். இனி ஆதியந்தமில்லாத கடவுளாகிய பரப்பிரம்ம சைதன்யத்தில் இரண்டறக் கலத்தலாகிய சிவயோகமென்னும் அத்துவைத மோட்ச கைவல்லிய விதேக முத்தியை அடையும் பாக்கியத்தைப் பெற்றேன். இனி மூவுலகங்களிலும் என்னை நிகர்ப்பவர் யாவர்? ஒருவருமேயில்லை. இதுதான் மகான்களைக் காணுவதின் பலன்' என்று சொல்லி சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து வழிபாடு செய்தது என்று ஆன்றோர் கூறுவது கர்ன பரம்பரை. பெரியகாடாக்கினியில் (காளவாய் நெருப்பின்) உலர்ந்த விறகுகளும் தகித்துச் சாம்பலாகிப்போகும். அதுபோல் மகான்களது கிருபாவீட்சணியத்தால் அவர்களை அடைந்தவர் செய்த நல்வினையும், தீவினையும் நீங்கிச் சிற்சுகோதயமுண்டாகும்.

மூதுரை.

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப் பதுவு நன்று.

வே. பாஸ்கரன் 2-ம்பாகம்.

## சீடரிலக்கணம்.

189-ம் பக்கத் தொடர்ச்சி.

நல்லா பிள்ளை பாரதம்.

இன்னவ னினியானென்று யாவருமறியா வென்னைத்
தன்னொடு கூட்டியுண்டு தார்மணி பொருக்கிக்கோர்த்து
அன்னதும் போதாதங்க தேயத்துக் கதிபனுக்கி
மன்னவன் செய்தான்றி மறப்பனோ பிறப்புக்கெல்லாம்.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே
மாசறத் திகழுமே காந்த
இடந்தனிற் புரிந்து நானயர்ந் திருக்க
எடுக்கவோ! கோக்கவோ!! என்றான்.

அன்றியும் புலவர் நாயகம் அப்துர் றகுமான் சாகிபு ஒலியுல்லா அவர்கள் பூவைமாநகரம் போகானந்த மஸ்தான் அவர்களையும் (இல்) விஷயமாய் சோதித்து உபதேசஞ் செய்திருக்கிறார்கள். இதுபோன்ற கதைகளைப் பெரிய புராணத்திலுங்காணலாம்.

சிவநெறிப்பிரகாசம்.

தேசிகரு மாணவர்கள் செய்தியுணர்ந் திடவே
சிறியோரைப் பெரியோர்செய் தொழிலதனிற் செறித்தும்
ஏசிலராம் பெரியோரை யீனமாந் தொழிற்கே
இசைத்தும்அடித் தும்வைதும் இவ்வாறு செயவும்
கூசியிடா திட்டபணி செய்துகுரு பத்தி
குறைவிலராய் நம்பினராய்த் துரோகமென் பதின்றி
மாசிலராய் மனம்வாக்காற் காயத்தாற் குருவின்
வாக்கியம்பா லனஞ்செய்யும் மதிமானு மாமே.

அருட்பிரகாசம்.

குருபரனுக்கவன்நெஞ்சகம்போலநுகூலத்தனாய்க்
கரசரணதியினேவல்செய்தேதினங்கட்கிம்மைபோல்
உரியமனைமுதல்யாவையுங்காத்தண்மையாயொருதற்
பரமிவனேயெனக்காண்பான்சற்சீடன்பகர்ந்திடினே.

தேசிகன்பாற்பற்பலதீக்குணங்கள்செறியினுநம்
பாசப்பிராந்திக்கிவைதோற்றியவிறைபாலிலையென்
றாசறுபத்தியினோர்ந்தெவ்விதத்துமவனருளைத்
தேசங்குலவவளர்ப்போன்சற்சீடன்செறிந்திடனே.

நெருப்பில் நடந்தவர்களும், நீர்நிழலில்லாத கொடிய பாலைவனத்திற் செல்பவர்களும் குளிர்ந்த சலத்தை தேடியலை

வார்கள். அதுபோற் சற்சீடனானவன் உலக வியர்பாரமாகிய வெப்பத்தைச் சகித்தற்கியலாது குருமூர்த்தியாகிய கருணைத் தேவ விருட்சத்தின் திருவடி நீழலைத் தேடிக்கண்டு வணங்கிப் புகழவேண்டும்.

### சிவஞானவள்ளல்.

கண்டான்குருவைக்கண்ணாரக்கதறிவீழ்ந்தான்கமலமிசை
அண்டாவரனே! நெடுமாலே! அயனேஎன்றாணகமகிழ்ந்தான்
தொண்டாலியலும்பணிசெய்யத்துணிந்தான்பணிந்தான்மும்
பண்டால்நிறைந்தபாவாலுங்காவாயென்னப்பாடினான். [முறையே

கண்ணிலாக்குழவிவெய்யகாரிருட்டறைபட்டாங்குத்
திண்ணியமலவறைக்குட்சிக்கியசிறியேன்றன்னை
நண்ணருஞானக்கையால்நான்முகன்முதலோரேங்கத்
தண்ணளியாலெடுத்தசற்குருநாதா !போற்றி !!.

முத்தரைப்பகைவரென்றுமூர்க்கரையுறவரென்றும்
பெத்தனையனேககாலம்பிறந்திறந்தெய்த்திட்டேற்குப்
பத்தியான்ஞானங்காட்டிஞானத்தாற்பரனைக்காட்டும்
சத்தியஞானானந்தசற்குருநாதா !போற்றி !!

உலகத்தில் சூராதியிராட்சதர்களால் உண்டாகிய இடுக்கணால் அரிபிரமர் முதலிய தேவர்கள் தத்தம் நிலை குலைந்து என்ன வரப்போகின்றதோ? என அச்சம் சனித்துக்கொண்டிருந்தார்கள். அவ்விடுக்கண் களைவான் கருதிச் சிவபெருமானது ஞானக்கண்ணாகிய நெற்றிக்கண்ணிலிருந்து சுவாலித்துக்கொண்டிருந்த ஞானாக்கினியை அக்கினிதேவர் வாயுதேவர் களைக்கொண்டு சரவணப்பொய்கையில் விடுத்து முருகக்கடவுளாக திருவவதாரஞ் செய்துவைத்தனர். அம் முருகபிரான் பற்பல திருவிளையாடல்களைப் புரிந்து கைலாயக் கோபுரவாயிலில் இருக்கும்போது, அரிபிரமாதி தேவகணங்கள் எல்லாம் சிவபெருமானது திருவோலக்கங்காணச் சென்றனர். அவர்களில் பிரமதேவன் எதிரிலிருந்த கந்தவேளை மதிக்காமல் இறுமாப்போடு சென்று திருவோலக்கங்கண்டு மீண்டனன்

அப்போது முருகக்கடவுள் பிரமனை நோக்கி நீ யார்? எங்கு சென்றனை? உன் தொழில் யாது? என்று விசாரித்தறிந்து; நீ பஞ்சகிருத்தியங்களின் முதலாவதாகிய சிருட்டித்தொழில் புரியவல்லையாயின் நினக்கு வேதம் தெரியுமோ? தெரிந்தாற் சொல்லெனப் பிரமதேவன் பிரணவத்தை யுச்சரித்துக்கொண்டு வேதம் சொல்ல ஆரம்பித்தான். அவ்வாறு கூறிய பிரமதேவனை நோக்கி நிறுத்து! நிறுத்து!! முன் சொன்ன "ஓம்" என்னும் பிரணவத்திற்குப் பொருள் யாதெனலும் பொருள் கூறத் தோன்றாமல் வெட்கித் தலைகவிழ்ந்து வெருண்டு திகைத்தான். பிரணவத்திற்கு பொருள் தெரியாத நீ சிருட்டி செய்வதும் இவ்வாறுதான் இருக்கும் என்று கூறி அவன் சிரங் குலுங்கக் குட்டிக் கந்த வெற்பில் சிறையிடுவித்து உலகியல் கெடாவண்ணம் தாமே நெடுநாள் சிருட்டிசெய்துவந்தார்.

### கந்தபுராணச் சுருக்கம்.

மன்னுகுடிலைப்பொருளை அறியாமல்மயங்குதலும்
கொன்னுடையநாசிங்கக்குட்டி தலைக்குட்டியுதைத்
தின்னலுறக்கந்தவெற்பிற்சிறையிடுவித்ததிலேகி
அன்னனடையுமைபாலன்ஆவிகள்பன்னாட்படைத்தான்.

இதைத் திருமால் முதலிய தேவர்கள் ஓடோடியும் போய்ச் சிவபெருமானுக்குத் தெரிவிக்க, அவர் நந்திதேவரை யழைத்துப் பிரமனை சிறையினின்றும் விட்டு விடும்படி நாம் சொன்னதாகக் கந்தவேளிடம் சொல்லி வரும்படி ஆக்ஞாபித்தனர். அவ் வுத்தரவை நந்திதேவர் சிரமேற் கொண்டுபோய் சண்முகக் கடவுளிடம் விண்ணப்பிக்க, அவர் கோபங்கொண்டு உன்னையுஞ் சிறையிலிடுவோம் என்னக்கேட்டு நடுங்கி வணங்கிப் போய் நடந்தவைகளைப் பரமசிவத்திடம் சொல்லி நின்றார். உடனே பரமசிவன் எழுந்து வந்து சிறைவிடச் சொல்லியும் கேளாததால், பல கடுமையான வார்த்தைகளைச் சொல்லிச் சிறை விடச்செய்து, அதன்பின் குமாரக்கடவுளை நோக்கி அன்புடன், உனக்குப் பிரணவார்த்தம் சொல்லவருமோ? தெரிந்தால் சொல்

என்றனர். அதற்கு முருகவேள், குருசீடக்கிரமமாய் இரகசியமாகச் சொல்வதன்றிப் பகிர்முகமாகச் சொல்லலாமா? எனச் சிவபெருமான் நகைத்து, நீ எனக்கு உபதேச விதிப்படி கூறென்று செவிசாய்த்து வணக்கமாகக் கேட்க, முருகபிரான் ஆசாரியக் கிரமத்திலிருந்து குடிலைப் பொருளை யுபதேசித்தருளினர் என்னும் ஆகமத்தைக் கும்பகோணத்தை யடுத்த திருவேரகத்தில் இன்றும் பிரத்தியட்சமாகக் காணலாம்.

கந்தபுராணம்.

முற்றொருங்குணருமாதிமுதல்வகேள்உலகமெல்லாம்
பெற்றிடுமவட்குநீமுன்பிருணராதவாற்றாற்
சொற்றதோரினையமூலத்தொல்பொருள்யாருங்கேட்ப
இற்றெனஇயம்பலாமோமறையினல்இசைப்பதல்லால்.

சூராதி யிராக்கதர்களை யொழித்துத் தேவர்களைச் சிறை மீட்டு உய்வித்தற் பொருட்டு முருகக்கடவுள் அவதரித்தார் என்பது புராணக் கருத்தாயினும், அகத்தியர் முதலிய மகரிஷிகளுக்கும் ஏனைய பரிபக்குவ முடையவர்களுக்கும் உபதேசித்தருளுதற்பொருட்டு அவதாரஞ் செய்தனர் என்பது ஒருவாறு பொருந்தும்.

(இன்னும் வரும்) வேதாந்தபாஸ்கரன்.

## ஐம்பெரும் பவங்கள்.

திருமகள் தோன்றிய திரைகடல் சூழ்ந்த இவ்வையத்தின் கண் வாழும் மக்களது வாழ்க்கையை தனது திருவுள்ளத்திற் கியைந்தவாறும் அவர் அவர்களது இருவினைக்கீடாகவும் எண் குணமுடைய இறைவன் தனது திருவிளையாட்டாக நடாத்தி வருகின்றனன். இப் புவனத்துள்ள ஒவ்வொரு உயிரும் ஆண்டவனது உண்மை நிலையை உணர்ந்து தீவினைகட்கஞ்சி நல்வினைகளாற்றி அறத்தை மேற்கொண்டு அடியார்களை வழிபட்டு அன்னனது திருவடிகளையடைய முற்படுதலே ஆன்மாக்கட்கு விடுதலை வழியும் உய்நெறியுமாம் எனினும் ஈசனை அடைந்துய்தற்கு ஏதுவாய் பகுத்தறிவை ஏனைய பிறவிகளைக்காட்டிலும்

சிறப்பாகப்பெறுவது மானிடப்பிறவியேயாம். இப் பகுத்துணர்வாய ஆறுமறிவு மனிதப்பிறவிக்கன்றி பிறவெத்தகைப் பிறவிகட்குமிலது. இதுபற்றியே "வாய்த்தது நந்தமக் கீதோர்பிறவி மதித்திடுமின்" எனவும் "மனிதப்பிறவியும் வேண்டுவதே இம் மானிலத்தே" எனவும் தமிழ்வேதமும் "எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதானியாதினு மரிதரிதுகாண்" எனத் தாயுமானாரும், "அரிதரிது மானிடராதலரிது" எனத் தமிழ்ப்பெருமூதாட்டியாம் ஔவையாரும் அருளிச்செய்துளார்கள். இத்தகைப் பெருமைசான்ற கிடைத்தற்கரிய மனிதப்பிறவியை இறைவனருளாற் கிடைக்கப்பெற்றும், மெய்நெறியுணர்ந்து அதன்வழி நடந்து ஆண்டவனடிகளை அடைதற்கொரு சிறிதும் முபற்சி புரியாது, தீவினைப்பயனறியாது "கண்டதே காட்சி கொண்டதேகோலம்" என இறுமாந்து அறிவுநூல்களால் தூற்றப்பெறும் ஐம்பெரும்பவங்களை அலகறப்புரிந்து இறுதியில் தீவாய்நரகழுந்தும் மாக்கட்கு சிறப்புணர்வாய் பகுத்தறிவு எற்றுக்கு? அன்னார் மானிட வுடல் தாங்கியிருப்பினும் விலங்குகளோடொப்பான்றோ? நிற்ப.

ஐம்பெரும்பவ (பஞ்சமஹாபாதகங்க)ளைப் புரிவதிலேயே தமது வாணாளைக் கழிப்பவர்களன்றோ தீவாய்நகரிலழுந்துவர் பிறர்க்குப் பெருமிடர் நேராவாறு விளையாட்டாகவேனும், தற்செயலாகவேனும் வேறு கதியிலாது அப்பவங்களிலொருசிறிது புரிய நேரிடின் எவ்வாற்றால் தீமைவிளையும் எனக் கருதுவாருமுளர்—ஏன்?—புரிவாருமுளர் (எங்ஙனனேயெனின் பிறனில்விழையாவுளமுடையோன் பிறபெண்டிர்களது ஆடல் பாடல்களிலும் சம்பாடணையிலும் கருத்தைச்செலுத்தி அகமகிழ்வானாயின் அச்செயல் அவனுக்கு ஒரு சிறிதும் காம பாபபலனை விளைவிக்காதெனவும், விளையாட்டாகவேனும், பரிகாசமாகவேனும் உயிர்க்கு ஆபத்நேருங் காலத்தேனும், வேறெவ்வகையாலேனும் சிறுபொய் புகலல், பொய்யின்பவக்கொடுமைகளை விளைவிக்காதெனவும், நமது உணவிற்கே பிறபிராணிகளிறைவனாற் படைக்கப்பட்டன என பொருந்தாவாதம் புரிந்து அஃதப்பவத்

றை விளைவிக்காதெனவும் பிறவனைத்தும் கூறுவது.) இக்கூற்றை தக்க மேற்கோளால் முற்றும் மறுத்து ஐம்பெருவங்களி லொன்றுவத் துணையேனும் எவ்வகையாற் செய்பினும் அவ்வினைக் கீடாக அவ்வவ்வரும்பவக் கொடுமைகள் அடைந்தே தீருமென் பதை ஐயமற விளக்கவெழுந்ததே விக்கட்டுரை. இதிற் குற்றங் குறை கணிகழுமேல் சிறு குழவியின் மழலைச் சொற்களென மதித்து ஆய்ந்தமைந்த கேள்வியறிவுடைய சான்றோர் பொறுப்பா ராகுக.

முற்காலத்து அறநூல்களானும், பெரியார்களாலும் நிகழ் காலத்து அறிவுப்பெருமக்கள் பற்பலரானும் வகுக்கப் பெற்ற வாறு கொலை, களவு, கள், காமம், பொய் என்பனவே ஐம் பெரும்பவங்களெனப்படும். (இக் கூற்றையே மிக்கபுகழும் தொன்மையுமுவாய்ந்த மனுஸ்ம்ருதி "பிரமகத்தி, கனகத் திருட்டு, சுராபானம், குருபன்னிப்புணர்ச்சி இந்நால்வரொடும் தனித்தனியே சேர்ந்திருத்தல்" எனச் சிறிது மாறுபட விதித் துளது) (பிரமஹத்தி—கொலையெனவும்; கனகத்திருட்டு—கள வெனவும், சுராபானம் மது வருந்தலெனவும்; குருமனைப் புணர்ச்சி—காம (மிகுதி) யெனவும்; இந் நால்வரது செயல்கட் கும் துணைபுரிதல் (பொய்கூறலெனவும் இவ் வைந்தும் அவ்வ வற்று ளுறுதியு மிறுதியு முயர்ந்ததுமாமென்பதும் தெற்றெனப் புலனுமாறு தேர்ந்துதெளிக) இவையொருபுறமிருப்ப இவ் வைம்பெரும்பவங்களின் கொடுமைகளை ஒவ்வொன்றுகச் சிறிது விரித்துக் கூறுவாம்:—

## கொலை.

ஒருயிரைக் கொலைபுரியின் அக்கொல்லப்பெற்ற பிராணி, மறு உலகத்தில் அவ்வுயிரைக் கொன்றவனையே கொல்லுமுண் மையைத் தொன்னூல்கள் பல அறிவுறுத்தும். இஃது கீழ் வருமாறு இலிங்கபுராணங்கூறுவதாற் போதரும்,

"ஒருயிர் தன்னைக் கோறல்செய்தோர்க ளுயிரினை யுவ்வுயிரெய்திச்
சோர்வுறக்கொல்லு மாதலாற்கோறலாதல்மற் றொழிந்திடல்வேண்டும்"

அன்றியும் இதுபற்றியன்றே (நல்லாப்பிள்ளை) மகா பாரதம்.

"உயிர்க்கொலைபுரியாச்செய்கை யொன்றுமேவறங்கட்கெல்லா
மியற்படுமிறையாங்கோறல் இழிபினுக்காசதாமால்"
[எனவும் (கோறல்-கொல்லல்)

" இந்நோய்தமக்குண்டென் றெண்ணாதே யெவ்வுயிரும்
முன்னேவைக்கொன்றுண்ணும் மூர்க்கர்தாம்—எந்நோவும்
பண்ணப்படுநரகிற் பாவிகளிற்பாவிகளென்
றெண்ணப்படுவா ரிசைந்து "—எனத் தமிழிதிகாசம் கூறுவதும்,

"உயிருடம்பி னீக்கியா ரென்பர் செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கையவர் "

என ஆசிரியர் திருவள்ளுவனார் கூறுவதுமிங்கு குறிப்பிடத் தக்கன. மற்றும் ஒரு நூறுமுறை பரிவலம்புரிந்து செயும் வேள்வி (அசுவமேதயாகம்) பெருந்தவப்பயனை சாமளவும் புலாலொழித்தலாற் பெறவியலுமென்பதை

" அவிசொரிந் தாயிரம்வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று " —குறள்
" தானமுந் தருமமுந் தவந்தியானமு
மானதோருயிர்கொலா வறத்தினங்கமாம் "—பாரதம்

எனவருஉம் ஆன்றோர்களது அருளிச்செயல்களால் ஆழ்ந்து தெளிக. நிற்க,

நிகழ்காலத்து இத்தமிழ்நாட்டின்கண் பெரும்பாலும் பிரம ஹத்தி, ஸ்திரீஹத்தி, சிசுஹத்தி இன்னோரன்ன மனிதவுயிர்களைக் கொலைபுரிதல் முதலியன அனேகமாக நடைபெறுவதில்லை. அவ்வண்ணம் ஒரு சிறிது எங்கேனும் நடைபெறினும் அச்செயற்குத்தக்க தண்டனை அரசாங்கத்தினரால் கொலையாளர்கட்கு விதிக்கப்படுவதால் அன்னோர் பெருகுவதில்லை. ஆகலின் ஆடு முதலிய விலங்குகள், கோழி முதலிய பறவைகள், மீன் முதலிய நீர்வாழ்பவைகள் முதலியவைகளை பெரும்பாலான

மாக்கட்கிறையாகின்றன. இந்நாட்டின்கண் வரவர அத்தகைப் பிராணிகள் ஈ. எறும்பு, கொசு முதலியவைகளை மாய்தல்போல வதைக்கப்பெறுகின்றன. ஐயகோ! இம்மட்டோ! ஒவ்வொரு அவயவத்திலும் ஒவ்வொரு அமரர் வசிக்கப்பெறும் நினைத்தற் கெட்டாப் பெருமையுடைய தூஉம் நம்மவர்களாற் பூசிக்கப்பெறு வதூஉமாய எண்ணிலா ஆவினங்கள் உயிரோடும் வதைத்துண் ணப்படுகின்றன. அச்செயலினால் விளையும் பெரும்பவத்தின் கொடுமையைத் தமிழ்நாட்டவர்கட்கு விரித்துரைக்க வேண்டுவ தில்லை. "ஒரு பசுவை வீணாக வதைப்பவன் அப்பசுவிற்கு எத்துணை மயிர்க்கால்களுளவோ அத்துணை முறை பசுப்பிறவி தாங்கி ஒவ்வொரு பிறவியினும் வதைக்கப்பெறுவான்" எனும் மனுஸ்ம்ருதியால் அச்செயலின்பயன் வெள்ளிடை மலைபோற் செவ்விதிற் புலனாதல் காண்க. நிற்ப, பிறபிராணிகளே பெரும் பாலாராற் சதிக்கப்பெறுகின்றன. தோன்றி நின்றழியும் இச் சடவுடலத்தின் கொழுமையின் பொருட்டு பிறிதொரு பிரா ணியை வதைத்து அவ்வூனை யிவ்வூனிற் றுருப்பது அந்தோ! எத்துணை மதியீனம்! கீரை முதலிய தழையுணவுப் பொருள் களைக் காட்டினும், புன்புலால் எவ்வகையால் இவ்வுடற்கு வளம் பயக்குமோ தெரியவில்லை. ஊனுண்ணலிலுள்ள பெருந்தீமையை இவ்வுலகத்தவர்கட்கே அறிவுறுத்திய இத்தமிழ் நாட்டவரே அக்கொடுஞ்செயலில் மிகமிக ஆர்வமுடையோராதலும் அவ் வுணவையே உயிர்வாழ்தற்கு இன்றியமையாததாக கொண்டி ருந்த அமெரிக்க நாட்டு அறிவாளர்கள் முதலிய மேனாட்டினரிற் பற்பலர் விடுத்தொழித்து வாழ்தலும் விதியின் பயனேயோ? அன்றி இறைவன் றிருவுள்ளந்தானோ? யாதுமறிகிலேம்; இது பற்றியே திருவள்ளுவனார்

> "தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூ னுண்பா
> னெங்ஙனமா ளுமருள்" —எனவும்
>
> "கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> யெல்லாவுயிருந்தொழும்" —எனவும்

தமது "பொய்யாமொழியிற் புகன்று போந்துளார்." அன் றியும் "அன்புடையார் பிறர்க்கென்புடையார்" என்பதைச்

செய்கையில் (புரந்தானுக்கு வச்சிரப்படை வழங்கி) காட்டியருளிய ததீசிமாமுனிவர் வழித் தோன்றிய பாரதமக்கள்— தஞ்சமென வந்தடைந்த ஒரு சிறு புறவின் இன்னலைக் களைவான் வேண்டி, தனது தசையையும், களையமுற்பட சிபிவழித் தோன்றிய ஆரியமக்கள்—ஆவின் கன்றை அறியாது கொன்ற தனது புதல்வனைத் தானேவதைத்த மனுநீதிச்சோழன் வழித் தோன்றிய தமிழ்மக்கள்—இதுகாலை, ஒரு சிறிதுஞ் சீவகாருணியமின்றி, எப்பாவமுமறியாத, மறி முதலிய வற்றைக் கதறக் கதறக் கழுத்தை யறுக்குங் காலமும், இப் பண்டைப் பாரத மணித்திரு நாட்டினை யடைந்ததை என்னென வருணிப்பது? ஈசனை நோக்கி யாதென முறையிடுவது? ஆகலின்— அறிவாளரனைவரும், ஆண்டவன் றண்டனைக் கஞ்சுவாரும் "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி—தின்னுயிர் நீக்கும் வினை".

## களவு.

இதுகாலை யின்னாட்டின்கண், பிறபவங்களினுங் களவு தலைமை பெற்றுலாவுவதாயது ஆகலின், அதைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

ஒருவன் அளவிடற்கரிய அல்லலனுகர்ந்து, உழன்று தேடித் திரட்டிய அரும்பொருளை, பிறிதொருவன் எளிதிற்கவரின், அப் பொருட்குடையானது கவலையும், சாபமும், வயிற்றெரிச்சலும், கவர்ந்த பெரும் பவமும் யாண்டுச்செல்லும்? கவர்ந்தானையே அடையுமன்றோ? அதன்பயனாக, அக்கள்வற்குறும், கொடுமைகள் பலவகைப் படுமன்றோ? அன்றியும், கவரநினைத்தது முதல், இறுதிவரை அவனையடைவது அச்சமே.

"அரிமுழை நுழைதல்போலஅயலகம்புகும்போதச்சம்
பொருடிருடும்போதச்சம்புறப்பட்டேகுங்காலச்சம்
தெருவினிலெவர்க்குமச்சங்கவர்ந்தனதிளைக்கவச்சம்
உருமுருக்கொண்டகள்வருளங்குடிகொண்டபோலும்"—என

அக்கருத்தை, ஆன்றோர்கள் எத்துணை யழகாகக் கூறியுள்ள னர். அன்றியும், அக்களவினாலாய பொருளும், பெருகு வதுபோற் றோன்றி, இறுதியில் முற்றுமழியும். இஃது

"களவினாலாகியவாக்கமளவிறந்—தாவதுபோலக்கெடும்"—எனவும்
"களவின்கட்கன்றியகாதல்விளைவின்கண்-வீயாவிழுமந்தரும்"-எனவும்

(களவில் மிகுந்த ஆசையானது மிகுந்த துன்பத்தைத் தருமென்பது) வரூஉம் தெய்வப்புலமை திருவள்ளுவர் வாக்கா லுந் தெற்றெனப்புலனாகும். மற்றும் மிகமிக மட்டமான—(ஒரு அணுவத்துணையேனும் உயர்வில்லாத) பொருள்களையுங்கூட— பரிகாசத்திற்கேனும், விளையாட்டினும் கவரநினைப்பினும்—கவர்ந் தாலும்—அப்பவமடையுமென்பதை கீழ்வருவதாற் காண்க.

,, அன்னம்பாறயிர்நெய்பண்ணியாரங்களளத்தாற்கொண்டோர்
பன்னுமச்சங்களாதிநீர்பயிலுயிர்களாவர்"—என பாரதம் கூறுகின்றது.

ஆகலால் எவ்வாற்றானுங் களவை நினைத்தலுங்கூடாது, என அறிக. (தொடரும்)

ஆ. வ. பதுமநாப பிள்ளை,
"வேணுகோபாலநிலயம்," ஆரியூர்.

## புத்தகம். (Books).

"புத்தகமில்லாவீடு, ஜன்னலில்லா அறையையொக்கும்" என்பது ஓர் ஆங்கிலப்பழமொழியின் மொழிப்பெயர்ப்பு. இங்கு புத்தகமென்றது அறிவூட்டக்கூடிய புத்தகங்களைக் குறித்தே. ஒரு நல்ல புத்தகமானது திராக்ஷைக்கொடியைப்போல் தன் னுள் நல்ல பழங்களைக் கொண்டிருக்கவேண்டும். புத்தகங் களினுள்ள கருத்துக்காக நாம் அவைகளை மதிக்கின்றோமே யன்றி அவைகளின் தோற்றத்திற்காக மதிப்பதேயில்லை. "தோட்டிமுதல் தொண்டமான் வரையில்" நாமெல்லோரும் புத்தகப்பிரியர்களே. நாம் எந்தவிடத்திலும் எந்தநேரத் திலும் படிக்கின்றோம். ஆனால் நாம் எந்த விஷயத்தையும்

படிக்கின்றோம் என்பதே மிகவும் விசனகரமானது. சில புத்தகங்கள் ருசிபார்க்கப் படுவன; சில விழுங்கப்படுவன; இன்னும் சில மென்று தின்று ஜீர்ணிக்கப்படுவன; அதாவது சிலவற்றில் சிறு பாகங்களைமாத்திரம் படித்தலும், சிலவற்றை மிக்க ஆவலுடன் படிக்காமலும், மற்றுஞ்சிலவற்றை மிக்க கவனத்தோடும், ஊக்கத்தோடு படித்தலும் வேண்டும். புத்தகமானது மனிதனுடைய அழியா நேயன்.

ஆனால் படித்தலென்னும் பாதையில் ஆழப்படுகுழிகள் அநேகம் உள. ஒருவன் தன் சகவாசத்தில் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமோ, அவ்வளவு ஜாக்கிரதையாய் அவன்படிக்கும் புத்தகங்களிலும் இருக்கவேண்டும். ஏனெனில் அவனுடைய நடையுடைபாவனைகள் இவ்விரண்டிலும் திருந்தவோ குறையவோ ஹேதுஇருக்கிறது. புத்தகங்களிற் சில நல்லவைகளும், சில கெட்ட சத்துடையவைகளாயும் இருக்கின்றன.

“புத்தகப்பெருக்கே தற்காலத்து முக்கிய விசேஷங்களில் ஒன்றாக இருக்கின்றது” என்று ஆங்கிலப்புலவருட் சிறந்தவரான ஜான்ஸன் (Johnson) கூறுகிறார். நம் முன்னோர்கள் எழுதிவைத்திருக்கும் புத்தகங்களினால் நாம் எவ்வளவு சந்தோஷத்தையும், அறிவையும் அடைந்திருக்கிறோம் என்பது யாம் அறியாததன்று. ஆனால் “அறியாமை நிரம்பும் காலத்திற்றான் புத்தகங்கள் அதிகமாய் வெளிவருகின்றன” என்றும் பெரியார் சிலர் கொள்கை எவ்வளவுதூரம் உண்மை என்பதை நாம் அறியக்கூடாதவர்களாயிருக்கிறோம்.

இதுநிற்க “அதிகமாய்ப் படிப்பதோ் அதிகமாய்ச் சாப்பிடுவதை யொக்கும்” என்பது பெரியார் கருத்து. இவ்விரண்டுவிஷயத்திலும் ஜீரணமில்லாவிடில் சற்றும் பயனில்லை. கிடைக்கப்பெறுவதைக் கொள்ளும் எளிய விலைமாதர்களைத் தோளைப்போல் வழிபட்டு கற்பவர்களுக்கெல்லாம் எளியனவாய் நிற்கின்றவை புத்தகங்களாம். ஆனால், அவ் விலைமாதரின்

மனத்தைப்போன்று அந்நூற்களின் பொருள்கள் எவர்க்கும் எளிதில் உணர்வதற்கு அரியனவாகும்.

"சிலர் புத்தகங்களை வாங்கி படிக்காமல் நிரப்புவார்கள்; அறிவுடையோர் அவற்றைப் படித்து நல்வழியில் நடப்பார்கள்" என்பது யாவருமறிந்தது. இதை நோக்கியே,

'புத்தகமேசாலத்தொகுத்தும்பொருடெரியார்
உய்த்தகமெல்லாநிறப்பினு—மற்றவற்றைப்
போற்றும்புலவரும்வேறேபொருடெறிந்து
தேற்றும்புலவரும்வேறு'

என்று நாலடியாரால் கூறப்படுகிறது. இக் கருத்தையே ஆங்கிலசிகாமணி யொருவர் ("Fools buy books and the wise read them") என்று ஓரிடத்திற் கூறுகிறார். இதனால் புத்தகம் வாங்குவதே அறியாமை என்று சொல்வதற்கிடமில்லை. புத்தகமே வாங்காமல் பிறகு படிப்பது எப்படி? வாங்குபவர் அதைச் சரியான வழியில் உபயோகப்படுத்த வேண்டுமென்பதே இதன் கருத்தாகும். இக்காலத்தில் எண்ணிறந்த பெரிய நூல் நிலயங்கள் (Libraries) அநேகமாய் எல்லாவிடங்களிலுமிருக்கின்றன. அவைகளினால் பொதுஜனங்கள் எவ்வளவு கற்றுக்கொள்கிறார்களென்பது யாவரும் அறிந்ததே.

இச் சந்தர்ப்பத்தில் மிகச்சிறந்த பழைய நூல்கள் சில புதிதாய் அச்சிடப்படாமல் நின்றுவிடுவதும் தற்காலத்தவர்கள் அதைச் சிறிதும் கவனியாதிருப்பதும் மிகக் கவனிக்கற்பாலனவாகும்.

கற்றறிந்த பெரியோர்கள் குற்றமதை
நீக்கி குணமதைக் கொள்வாராக.

S. துரைசாமி முதலியார்,

தெற்குவீதி-மலைக்கோட்டை, திருச்சி.

## சுதேசி (SWADESI,)

சுதேசியெனுஞ் சொல் பரதேசியெனுஞ் சொல்லின் எதிர் மறையாகும். இங்கு பரதேசியென்பது பிறதேசங்களுக்குரிய தென்றும், சுதேசி (சு+தேசி) யென்பது சொந்த தேசத்துக் குடையதென்றும் பொருள்படும். இனி சுதேசிக்கும், மக்கட் பேருக்கும் உள்ள சம்மந்தத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

இவ்விஷயத்தைப்பற்றி இந்தியர்களாகிய யாம் சிறிதும் கவனியாமல் வெகுநாளாய்க் கொண்டிருந்த உறக்கத்தினின்றும் சில பெரிய மகான்களின் போதனைகளால் இப்பொழுது சற்று விழித்துக்கொண்டோம். ஆயினும் அதை முற்றிலும் பின் பற்றாமல் வீண்காலம் போக்கிவருகின்றோம். இது நம்மனச் சான்றிற்கே முற்றும் விரோதமானது என்பது யாவருமறிந் ததே. சுதேசியத்தைப் பின்பற்றுவது நமக்கே ஒரு கௌரவம் என்பதை யாம் அறியாமலில்லை. ஆயினும், யாம் அதை முற்றி லும் கைக்கொள்ளாமலிருப்பது பெரிதும் அவமானமல்லவா? சுதேசியம் என்றால் சிலர் ஒத்துழையாமை யென்றே முற்றிலும் கொள்கின்றனர், இது மிகவும் தவறு. சுதேசியம் என்னும் பாதைவழிச்சென்றால் அது சுயராஜ்யம் என்னும் கைலாயத்திற் குக் கொண்டுபோய்விடும். இதனால் யாமொன்றும் நஷ்டப் படப்போகிறதில்லை. கைலாயத்திற்குப் போவதற்கு எந்த மூடனாவது பின் வாங்குவானா? இதை நாமே நன்கு யோசித்து உணரல்வேண்டுமேயொழிய சொல்வதென்றாலும், வரைவதென் றாலும் சாமானியமல்ல.

இச்சுதேசி விஷயத்தில் தொன்றுதொட்டு நம் நாட்டில் வழங்கிவரும் துணி விஷயமே மிகவும் முக்கியமானது. இச் சுதேசத்துணியே "கதர்" என்ற நாமத்தால் அழைக்கப்படும். இப்பெயரைக் கேட்டு யாவரும் பயப்படவேண்டியதில்லை. நம் முயற்சியால் நம் கொல்லையிற் பயிர்செய்து கிடைக்கும் கத்தரிக்

காயைச் சமையற்செய்து சாப்பிடுவதற்கு எந்த மனிதனுவது பயப்படுவானு? அதுபோல் நம்முயற்சியாற் செய்துகொள்ளும் துணியை உடுத்தப்பயப்படுவது எவ்வளவு மதியீனம் பாருங்கள்! இந்த மிகச் சாதாரணமான நம்பெருங் கடமையிலொன்றைத் தேசமுன்னேற்றத்தின் ஒரு பெரியகாரணமாகக்கொண்டு இதை யும் நாம் செய்யத்தவறினுல் நம்மைவிடத் தேசத்ரோகிகள் யார் இருக்கிறூர்கள்? அந்தோ! பெரிதும் பாவம்!

சுதேசியத்தை நாம் எவ்வளவுக்கெவ்வளவு எல்லாவிஷய த்திலும் அநுசரிக்கின்றேமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் நம் பிறப்பின் கருத்தையும், நமது கடமையையும் உணர்ந்தவரா வோம். இதைவிட்டுச் சிலர் "சுதேசியம் என் மனத்தினுள்ளது தான். அது எனக்கும் பிரியமானதுதான். ஆனுல் யான் அதைச் செய்தா காண்பிக்கவேண்டும்?" என்று தமக்குள் திருப்தியடைந்துகொள்கிறூர்கள். இது எதைப்போலிருக்கிற தென்றுல் யுத்தத்திற்குச் சென்று எதிரிகளைக் கொல்வதற்காக ஒரு தளகர்த்தன் தன் படைகளைக் கூப்பிடும்பொழுது அவர்கள் "எங்களுக்கு யுத்தம்செய்யவேண்டுமென்று முற்றிலும் பிரியந் தான். எங்களுடைய மனப்பூர்வமான எண்ணமும் அதுதான். ஆனுல், நாங்கள் வரவேண்டுமென்று கட்டாயமா? இவிடத் திலேயே இருந்துவிடுகிறேம். ஆகையால் வரமாட்டோம்" என்று கூறினுல் அவர்கள் அறிவும், நிலைமையும் எப்படியிரு க்கும் என்பதை நாம் அறிகிறேமல்லவா?

இனி சுதேசியத்தை யாம் அநுசரிப்பதால் பெரும் நன்மை களைக் கவனிப்பாம். இவ்வாறு நாம் செய்துவரின், நம்தேயத் துச் சோதரசோதரிகள் தம்மாலியன்ற கைத்தொழிலைச் செய்து பாக்கியம்பெற்று விளங்குவார்கள். ஏழைகளும், பாமரரும் ஆப்பிரிக்கா முதலான அயல்நாடு சென்று நாயினும் கேடாய் உழைத்து அநியாயமாய் அகால மரணமடையும் பாதகத்திற்கு நாம் ஆளாகமாட்டோம். அவர்களுக்கு வேண்டிய தொழில் நம் நாட்டில் ஏராளமாயிருக்கிறது. ஆனுல் நாம் அவற்றைச்

சிறிதும் கவனிப்பதில்லை. நாம் சுதேசியத்தைக் கைக்கொள்வோமாயின் நம் நாட்டில் கைத்தொழில் ஏராளமாய் விருத்தியாகி பிற நாட்டாரைப்போல் நாமும் செல்வவந்தர்களாய் நம் முன்னோர்களைப்போலவே கவலையின்றி வாழலாம்.

S. துரைசாமி முதலியார்,
தெற்குவீதி—மலைக்கோட்டை, திருச்சி.

## சங்கீதம்.

184-ம் பக்கத் தொடர்ச்சி.

ஆயிரத்து இருநூறு வருடங்களுக்குமுன் தஞ்சைமாநகரத்தில் அஞ்சனாட்சி என்றொரு தாசி இருந்தனள். அவள் கல்வியிற் சிறந்து விளங்கிய வித்துவாம்சை. கம்பநாடன் இராமாயணம் பாடி முடித்து அரங்கமா நகருக்கு அரங்கேற்றக் கொண்டுபோன காலத்து அங்குள்ள பிராமணர் அவரைநோக்கி புலவீர்! இன்ன இன்ன இடங்களுக்குப்போய் இவரிவர் கையொப்பம் கொண்டுவருக என்றபோது அஞ்சனாட்சி கையொப்பமும் கொண்டுவருக என்றனர். புலவர் பெருமான் அங்ஙனமே சென்று கேட்டபோது அதிக வியப்புற்று தாங்கள் இந்த அற்ப காரியத்திற்காக என்னை ஒரு பொருளாக மதித்து வருதல் சாலுமா என்று இங்கித வுரைகூறி

அம்பராவணிசடைஅரனயன்முதல்
உம்பரால்முனிவரால்யோகராலுயர்
இம்பராற்பிணிக்கரும்இராமவேழஞ்சேர்
கம்பராம்புலவரைக்கருததிருத்துவாம்

என்னுஞ்செய்யுளை உடனே பாடிக்கொடுத்தனள்.

“ இரண்டொன்றாய்முடிந்துத்தலையிறங்கப்போட்டு
வெட்டுதற்கோகவியொட்டக்கூத்தனில்லை ”

என்னும் செய்யுட்கிலக்கானவரும், வெண்பா பாடுவதில் கிம்மெருங்கிய புகழேந்திப் புலவராலும் விருத்தம் பாடுவதில்

சதுரனாகிய கம்பராலும் கர்வபங்கமடைந்தவரும் அழுக்காறில் சிறந்தவருமாகிய ஒட்டக் கூத்தரது துர்ப் போதனையைக் கேட்டுக் குலோத்துங்கசோழன் கம்பரைத் தன் தேயத்தை விட்டுத் துரத்தினன். கம்பரும் தன் குடும்பத்தாரிடத்துங் கூடச் சொல்லிக்கொள்ளாமல் சோழநாட்டெல்லையை விட்டுச் சென்றுகொண்டிருக்கும் வழியில் ஓரூரில் சிலம்பியென்னும் ஓர் ஏழைத்தாசி கம்பர்வாக்கால் கவிபெறவேண்டுமென விழை வுற்று அவரை மிகவும் உபசரித்தனள். ஆயினும்

காசுக்குக்கம்பன்கருணைக்கருணகிரி
ஆசுக்குக்காளமுகிலாவுனே—தேசுபெறு
மூழுக்குக்கூத்தன்உவக்கப்புகழேந்தி
கூழுக்கிங்கௌவையெனக்கூறு

என்ற செய்யுட் கருத்தின்படி கம்பர், பொருளாசையாலும் தாசியிடத்து அதிக பொருளிருக்குமென்று தாம் எண்ணிய படியாலும் தம் ஒரு கவிக்கு விலை 'ஆயிரம் பொன்' என்றனர்.

தாசியும் கவியை மிகவும் வேட்டனளாகலின் தன் சொத் தையெல்லாம் விற்க ஐந்நூறுபொன்தான் தேறிற்று. அதனைக் கம்பர்முன் வைத்து வணங்கலும் அவர் அதனை யேற்று

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே

என அரைவெண்பாவைப் பாடி நீ கொடுத்த பொருளுக்குப் பாட்டாயிற்று எனக்கூறி அதனை அவள் வீட்டுத் தெருச் சுவரின்மேல் எழுதிப்போயினர். தன் சொத்தெல்லாம் இழந் தும் செய்யுள் பூர்த்தியாகவில்லையே யென்று தாசி வறியளாய் வருந்திக்கொண்டிருந்தனள்.

இவ்வாறுய நாட்களில் அவ்வழியே வந்த ஔவைப்பிராட் டியார் அத் தாசியை நோக்கி என் பசிக்கு ஏதாவது கொடுக்க மாட்டுவையோ எனலும், அவள் தனக்காக வைத்திருந்த கூழைக்கொடுக்கப் பசி நீங்கிச் சிரமபரிகாரத்திற்காக அவள்

வீட்டுத்திண்ணையில் சாய்ந்துகொண்டிருக்கும்பொழுது சுவர் மீது வரையப்பெற்றுள்ள செய்யுளின் இரண்டடிகளைக் கண்ணுற்றுத் தாசியை வினவலும், அவள் நடந்தவற்றை ஆதியோடந்தமாகச் சொன்னாள். அவ்வம்மையார் உடனே,

... ... ... ...
... ... ... பெண்ணுவாள்

அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு

எனப் பாட்டை முடிக்கத் தாசி மகிழ்ந்தனள்.

இருநூற் றெண்பத்தைந்து வருடங்களுக்குமுன், மதுரை மாநகரத்தில் பூங்கோதை யென்றொரு தாசி யிருந்தாள். இவள்,

தேட்டாளன்காயல்துரைசீதக்காதிசிறந்தவச்ர
நாட்டான்புகழ்க்கம்பம்நாட்டிவைத்தான்தமிழ்நாவலரை
ஓட்டாண்டியாக்கிஅவர்கடம்வாயில்ஒருபிடிமண்
போட்டான்அவனும்ஒளித்தான்சமாதிக்குழிபுகுந்தே.

மறந்தாகிலும்அரைக்காசுகொடார்மடமாந்தர்மண்மேல்
இறந்தாவதென்னஇருந்தாவதென்னஇறந்துவிண்போய்ச்
சிறந்தாளுங்காயல்துரைசீதக்காதிதிரும்பிவந்து
பிறந்தாலொழியப்புலவோர்தமக்குப்பிழைப்பில்லையே.

என்பது முதலிய பல பாக்களால் வித்துவான்களால் சிறப்பித்துப் பாடப் பெற்ற பெருங் கொடை வள்ளலாக அவதரித்து விளங்கிய காயற்பட்டினம் செய்கு அப்துல் காதிறு என்னும் சீதக்காதி மறைக்காயர் அவர்கள் கொடுத்த பெருநிதியைக் கொண்டு தாசி தன் ஊருக்குப் போகும் வழியிலே கள்ளர் அப் பொருளைப் பறித்துக் கொள்ள கதியற்றவளாய்த் திரும்பி வந்து ஸ்ரீ மான் மறைக்காயரைக் கண்டு,

தினங்கொடுக்குங் கொடையானே! தென்காயற் பதியானே!
சீதக் காதி

இனங்கொடுத்த வுடைமையல்ல தாய்கொடுத்த வுடைமையல்ல
எளியாளாசை

மனங்கொடுத்தும் இதழ்கொடுத்தும் அபிமானந் தனைக்கொடுத்தும்
மருவி ரண்டு ...

தனங்கொடுத்த வுடைமையெல்லாங் கள்ளர்கையிற் பறிகொடுத்துத்
தவிக்கின் றேனே.

என்று இவ் விருத்தத்தைப் பாடக் கேட்ட மறைக்காயர், எவ்வளவு தொகை என்றனர். அதற்குத் தாசி, ஐயா! ஆயிரம், (1000) என்றனள். ஆயிரம் என்பதை ஐயாயிரமாகப் பாவித்து ரூபாய் (5000) கொடுத்து, பாது காப்புடன் ஊருக்கு அனுப்பி வைத்தனர். ஆகையால், மேற் கூறப்பெற்ற பொன்னனையாளும் அஞ்சனாட்சியும் பூங்கோதையும், தமிழ்ப் புலமையிற் சிறந்தவர்கள் என்பதற்கு அவரவர்கள் பாடல்களே போதுமான சாட்சியாகும்.

முன்னுள்ள தேவ தாசிகள் பண்டித சிரோன்மணிகளாக இருந்தது மன்றி, தெய்வ பக்தி, அடியார்களுக்கு வந்தனை வழிபாடு முதலிய சர்வோத்தம செய்கை யுடையவர்களாயும் இருந்திருக்கிறார்கள் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. இக் காலத்துள்ள தேவ தாசிகள், அதற்கு நேர் விரோதமாய் ‘ஏணலுக்குக் கோணல், இரும்புக்குத் துரும்பு’ என்ற பழமொழிப்படி அடியாரைக் கண்டால் விரக்தியும் நிந்தனையும், பணம் கொடுப்பவரைக் கண்டால் பக்தியும் வந்தனையும் செய்கிறார்கள். தன் வீட்டுக்கு வந்தவர்கள் எவ்வளவு பெரிய மகானா யிருந்தாலும் அவர்முன் கடவுள்மீது உருக்கமாகப் பாடிக்கொண்டிருக்கும்போதும், பணம் கொடுப்போரைக் கண்டால் சொல்லிக்கொள்ளாமலே எழுந்துபோய் அவனுக்குச்

சோடசோபசாரம் செய்து பலவிதத்திலும் மயக்கிப் படுகுழியில் தள்ளிவிடுகிறார்கள். ஆனால் உருத்திர கணிகையர் குலச்சிறுமிகள், காமரசத்தை ஓர் எட்டுணையும் அறியாத பருவத்திலேயே அக் குழந்தையின் மாதா முதலானவர்கள் பருவம் வந்த பின் விபசாரம் செய்ய இஷ்ட மிருந்தால் செய்யட்டும் என்று விடாமலும் காமரசம் கன்னியறிவாளோ என்னும் தாயுமானவள்ளல் கருத்தை உணராமலும் இருக்கிறார்கள்.

தேவதாசியாக விரும்புகிறவள், தனக்குப் பக்குவம் வந்த பின் தன் அபிப்பிராயத்தைத் துரைத்தனத்தாருக்குத் தெரிவித்து, துரைத்தன வைத்தியர் (Doctor) உறுதிமொழிச் சீட்டு (Certificate) கிடைக்கப்பெற்று, அதன் பிறகு அரசாங்கத்தார் அனுமதியின் பேரிலேயே கோவிலுக்குப் பொட்டுக்கட்ட வேணும் என்று காருண்ய முள்ள நமது துரைத்தனத்தார் ஆக்ஞாபித்திருக்க, அதற்காக (பொய்ச்சாட்சி சொல்வோன் நியாயஸ்தலத்திலும் மயங்காமல் சொல்வதற்கு கட்சி செயிக்கும் படி வக்கீல்கள் உருட்டும் புரட்டும் சொல்லிக்கொடுப்பதுபோல்) அந்தக் கன்னிகைக்கும் நாளாவட்டத்தில் துரைத்தனத்தார் அனுமதி கொடுப்பதற்கு வேண்டிய வாக்கியப் பிரயோகங்களை இப்படிச்சொல், அப்படிச்சொல் என்று அல்லும்பகலும்சொல்லி கொடுத்து மாதர்களுக்கு இயற்கையிலேயே உண்டான நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் இருந்த விடம் தெரியாமல் ஓடிப்போகும்படி ஆடல் பாடல் முதலியவைகளைக் கற்றுக்கொடுத்து ஏதுமறியாத பேதைப் பெண்குழந்தைகளை உதர போஷணையின் நிமித்தம் தாய்க்கிழவிமார்கள் கெடுத்துவிடுகிறார்கள். இனிமேலாவது,

வயிறு வளர்க்கைக்கு மானம்அழியா
துயிர்விடுகை சால வுறும்

என்பதை யுணர்ந்து இவ்விதத் துர்அனுஷ்டானங்களை விட்டொழிப்பார்களென்றும் அதனால் உலகம் மேன்மையடையு

மென்றும் தாய்க்கிழவிகளுக்கு எச்சரிக்கை செய்கிறோம். தாய்க்கிழவிகள் மேற்சொல்லிவந்ததைக் குற்றமென்று எண்ணக் கூடாது. 'தொட்டிற் பழக்கம் கட்டையிற் போகும் வரை' என்னும் முதுமொழிபோல், பெண்குழந்தைகள் கெடுவதற்கும் நன்மை படைவதற்கும் தாய்மார்களே காரணமா யிருக்கின்றனர்.

முற்காலத்தில் மதுரைமாநகரில் மாணிக்கவல்லி யென்றொரு தாசி இருந்தாள். அவளுக்குத் திருமகளும் கலைமகளுமே சிவஞான மாதர்களாக அவதரித்தாரெனச் சொல்லத்தக்க விதமாய் இரண்டு புத்திரிகள் அவதரித்தார்கள். அவர்கள் பேதைப் பருவம் கடந்து பெதும்பைப்பருவம் அடைந்தவுடன், மாணிக்கவல்லி மனங்களித்து, தமக்குரிய கலவித்தொழில்களை அவர்கள் அறிந்துகொள்ளும்படி விரகமிகுதற்கு ஏதுவாகிய சிற்சில லீலைகளை மாடம் முழுமையும் சித்திரித்தும், போக ஓசை பயிற்றுகின்ற மயில் முதலிய பறவைகளையும் வீணை முதலிய வாத்தியக் கருவிகளையும் சேகரித்து சூரியனிடத்திலே இருளைப் பழக்குவித்தல்போல் அவர்களுக்குக் காமக்கல்விகளையும் மோன வித்தையுள்ள முனிவோரையும் மயக்கும் கானவித்தையின் திறங்களையும் கற்பித்தனள்.

**சீகாளத்தி புராணம்.**

செங்கையொன்றுசெழுந்தாளப்பெருங்
கொங்கையொன்றைக்குழைப்பவொருகையால்
மங்கைதன்புறம்புல்லினன்வாயமு
தங்கருந்திறும்ஆண்டகையாகவும்.

இருந்தும்நின்றுங்கிடந்தும்எதிர்தழீஇப்
பரந்தமென்மலர்ப்பஞ்சணைப்பள்ளியிற்
குரும்பைமென்முலைக்கோதையர்தங்களைப்
பொருந்துமாறுபுணர்பவராகவும்.

அவள் இவ்வாறு பள்ளியறையில் கொக்கோக லீலைக்கிணைந்த சித்திரங்களைச் சுவரில் வரைந்து முயன்று கற்பித்தும்,

அந்தப் பெண்கள் இருவருக்கும் கடவுள் அபரஞான உணர்ச்சியையும் பந்தபாசத்தைப் பற்றறக்களையும் அனுபவமாகியுள்ள பரஞான உணர்ச்சியையும் தந்திருத்தலால் அவர்கள், தூராகிருதமான காமத்திலே பயிலாது, கரணங்களுக்கு அதீதமானது பரப்பிரமம் எனக்கண்டு வேறுமாயா விசித்திரத்தோற்றம் இல்லாதவராகி, இவ்வனுபவம் நிலைபெறுவதற் பொருட்டு அடியார்களைத் தேடித்தேடிக் காணப்பெறின் தோத்திரம் பண்ணி வணங்கித் தொண்டு செய்யும் அன்பிலே மிகுந்தவர்களாய் இருந்தனர். அன்றியும், வேட்கைக்குறிப்புகள், வஞ்சகமொழிகள், பழிப்புச்சிந்தனைகள், பாவச்செயல்கள் முதலியவற்றுள்ளே ஒன்றும் பற்றாதவராகி, பெதும்பைப்பருவம் அடைந்த அக்காலத்திற்றானே உலக வாக்கியங்களிலே ஊமையர் போலாகிப், பஞ்சேந்திரியங்களையும் அடக்கிப் பேதையராகியும் பேரிளம் பெண் எனவும் இருந்தனர். அப்போது தென்கைலையாகிய சிகாளத்தியின் பெருமையைக் கேள்வியுற்று தெரிசிக்கவேண்டுமென்று அவாவுற்றிருந்தனர்.

அதுகண்ட மாணிக்கவல்லி, மகளிரைநோக்கிப் 'பெண்களே! மழைபொழிந்த காலத்திலே விதைத்துப் பயன்கொள்ளும் உழவர்போல் காளையர்கள் வந்து கவிகின்ற இளமைபெற்ற இக்காலத்திலேயே,

வாடைமஞ்சள் பூசுவதும் மல்லிகைப்பூச் சூடுவதும்
ஆடவரை வீட்டுக் கழைப்பதுவும்—ஒடிப்
பிலுக்குவதுங் கிட்டநின்று பேசையிலே முத்துக்
குலுக்குவதுங் கொஞ்சுவதும் கொங்கைத்—தலைக்கறுப்பை
முந்திகொண்டு வெட்கம்போன் மூடுவதுங் காமுகரை
அந்தமட்டும் வைத்துவிளை யாடுவதும்—வந்தவரை
வாள்வீச்சுப் போலே வரிவிழியால் வெட்டுவது

மாக அபிநயித்து, அவ்விளைஞர்களிடம் பொருள் பறியாது விடுத்தால் நுங்களுக்கு இளமைப்பருவம் பின்னர் வருமா? கல்வியினும் கட்டழகினும் முதிர்ச்சியுடையராகி எக்காலம் பயன்படுவீர் என்று காத்திருந்த எனக்கு நீவிர் செய்யும் உதவி இவ்வளவு

தானே? பயன்படாத உங்களிடத்திலே பெண்ணிலக்கணம் முற்றும் அமைந்திருத்தல், ஈகையில்லாதவனிடத்திலே பொன்னும் அவைக்கு அஞ்சுவோனிடத்திலே அரிய கல்வியும் வீரமற்ற பேடிகையிலே வேலும் வாய்த்திருத்தல்போலாம்.

நீவிர், இளமைப் பருவத்திலேயே என்பால் உதித்து, எனது அழகு முழுமையும் கெடுத்ததே யன்றி, உங்கள் பொருட்டுச் செலவிட்ட திரவியத்திற்கு உதவி ஒன்றும் புரிந்தீரில்லை. மணிமந்திர ஔடதங்களாலும் பல்வகை யந்திரங்களாலும் ஆடவரை மயக்கி அவர் பொருளைக் கவர்ந்தால் சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் உதவியாகாதா? அழகு சிறிதுமில்லாதவரும், அணி முதலியவற்றால் அலங்கரித்துக் கொண்டு தம்மை அழகுடையவர்போற் காட்டியும், பிழையில்லாத ஆடவரையும் பிழையுடையராக்கிப் பொய்யன்பு பாராட்டி உணவையொழிந்து அவர் பன்முறை வேண்ட இருந்தும், நாடகத்தாலும் நல்லிசைகளாலும் மயக்கியும், பொருளீட்டிக் களியாநிற்பர். நீவிர் எவற்றினும் சிறந்திருந்தும் இங்ஙனம் செய்து பொருளீட்டாது இளமையை வீணே கழித்துவிடின், மூப்பு முதிர்ந்தவழி உம்மை இளைஞர் விரும்புவரோ?

ஆடவர்முன்ஆடையைஅவிழ்த்தனருடுத்தும்
கூடுமுலைதுசொடுகுலுங்குநடந்தும்
நாடகநடித்தும்இசைநல்லனபயின்றும்
வீடலரிதாயமயல்வேலையுளமிழ்ப்பார்.

என்று இன்னனவாகிய தன்குலச் செயல்களையுரைக்க, அவையாவும் கவிழ்த்த குடமீது விடாதுபொழியும் மழைநீர் போலச் சிறிதும் நுழையாது புறங்கழியநின்ற கன்னியர் உரைப்பாராயினர்.

## எண்வகைப் பிராணாயாமம்.

(1-2) பிராணன் என்னும் வாயுவானது நாசி நுனி முதல் சிரசுவரையிலும் அதாவது வெளிப்புறத்தில் (12) அங்குல அளவு செல்லும் வாயுவானது திரும்பச் சரீரத்துட் புகும்படி

பூரித்தலும்; புறத்திலிருந்து உள்ளடங்க வருத்தமில்லாதபடி அபானவாயுவானது சிரசு முதல் இருதயம் வரையிற் செல்லு தலும் இருவகை உட் (அகப்) பூரகம்.

(3) அபானன் என்னும் வாயுவானது ஒடுங்கி இருதயத் தில் எதுவரையிலும் அசைவற்றிருக்கின்றதோ அதுவரை யிலும் உட்கும்பகம்.

(4) இருதயசிதாகாசத்திலிருந்து பிராணன் புறத்தில் உதய மாவது உள் இரேசகம்.

(5-6) பிராணவாயுவானது நாசியினூடுருவி அதனுடைய நுனி வரையிற் செல்லுதலும்; நாசி நுனிமுதல் பன்னிரண் டங்குலப்பிரமாணம் செல்லுதலும் இருவகை வெளி(புற)ப் பூரகம்.

(7) வெளியில் பிராணவாயு ஒடுங்கி அபானவாயுவானது வெளிப்படாமலிருக்கும் பூரண அவத்தையாய் விளங்கியது வெளிக்கும்பகம்.

(8) அபானோதயத்தின் பிரகாச ரூபமான வாயுவின் உட் பார்வையானது வெளிஇரேசகமாம்.

பிராண, அபான வாயுக்களின் இவ் வெட்டுக் கதிகளும் நிச்சயமாய் முத்தியைக் கொடுக்கத்தக்கவை. இவையே மோட்ச த்துக்கு வழிகாட்டிகள். இவற்றின் நுட்பங்களை ஆராய்ந்து நன் கறிந்தவர்கள் ஒருகாலத்திலும் பிறவித் துன்பத்தில் அழுந்த மாட்டார்கள்.

இனி எண்வகைக் கும்பகமும் உண்டு. கண்டத்தால் வாயுவைப் பூரித்துக் கண்டத் துவாரத்திலே வாயுவை இரே சித்தல் புசகீகரணம் என்னும் கும்பகம். இதைச் சேர்த்து ஒன்பதுவகைக் கும்பகம் என்பார்கள். அவை விரிக்கிற்பெருகு மென நிறுத்தலாயிற்று.

இருதய கமலத்திலிருந்து உண்டாகிப் புறத்திற் பன்னிரண்டங்குலப் பிரமாணத்தில் அடங்கும் பிராணவாயுவானது சூரியன். துவாதசாந்த வெளியிலிருந்து (12) அங்குலப் பிரமாணத்தில் உதயமாகி, இருதயகமலத்தில் அடங்கும் அபானவாயுவானது சந்திரன். பிராணன் என்னும் சூரியனால் சரீரத்திற்குச் சூடும், அபானன் என்னும் சந்திரனால் சரீரத்திற்குக் குளிர்ச்சியும் அதிகரிக்கும். அபானன் என்னும் சந்திரனது கலைகளைப் பிராணன் என்னும் சூரியனால் வலிமையாக விழுங்கப்பெறும். அப்படியே பிராணன் என்னும் சூரியனது கிரணமாகிய கலைகளை அபானன் என்னும் சந்திரனால் வாறி விழுங்கப்பெறும். இவ்விதமாக இரண்டும் ஒன்றை யொன்று விழுங்கும் பாக்கியம் எவர்க்கு உளதோ அவர்க்கு மேலான பிரமபதம் எளிதிற் கிடைக்கும். பிராணனும் அபானனும் ஒன்றை யொன்று விழுங்க அவ்விரண்டிற்கும் இடையில் நிற்பவர்களுக்கு ஈடானவர்கள் எவருமேயில்லை. இவ்வப்பியாசம் பின் வரும் மூலபந்தம் என்னும் முத்திரையின் இலட்சணமாம்.

இருக்கும்போதும் நடக்கும்போதும் கனவிலும் நனவிலும் சதாவேளையிலும் பிராண அபானாதிகளில் இடைவிடாமல் மனதைச் செலுத்தினால் நீண்ட ஆயுளும் பிராணன் அடங்கி அபானன் உண்டாகாமல் இருப்பதும், அபானன் அடங்கி பிராணன் உண்டாகாமல் இருப்பதுமாகிய பிராணாபான மத்தியிற் பொருந்திய சிதாத்மாவின் சகாயத்தால் சிற்பர நிலையாகிய சீவன்முத்திப்பதம் கிடைக்கும்.

## யோகாப்பியாசம்.

முன் ஆரம்பத்தில் கூறிய மாத்திரை அளவைக் கவனித்து அப்பியாச ஆரம்பகாலத்தில் மாத்திரம் கண்களை மூடி நாசி நுனியும், இரண்டு கண்களுக்கு மத்தியுமாகிய புருவத்திடையில் மனதை நிறுத்தி "வேதாந்த பாஸ்கரன்" முதற்பாகம் சாவிலக்கண அத்தியாயத்தில் ஏனைய நூற்களைக் கண்டனம்

செய்து பரம ரகசியமாயுள்ள நாடி மாற்றத்தை நமது சகோதர சகோதரிகள் முன்னுக்கு வரும்பொருட்டு வெளிப்படையாகவும் உலோகோபகாரமாகவும் கூறப்பெற்றுள்ள நாடிமாறுதலின்படி தனது வலக்கை ஆட்காட்டி விரலால் சந்திரகலையாகிய (*) வலது நாசியை மூடிக்கொண்டு அச்பாவாக மனதினாலேயே சுவாசத்துடன் சேர்த்து வங் சிங் என்றுவது, லா கூ யா கூ இல்லல்லாகூ என்றுவது, ஓம் என்னும் பிரணவத்தையாவது ஒரு தலைமாணிக்கமும் சூக்கும பஞ்சாட்சரமுமாகிய ஓம் அம்

---

* இடது நாசியை முதற்கூறாமல் வலது நாசியை ஆரம்பத்திற்கூறியிருப்பதன் காரணம் யாதெனில், சூரியகலையானது சிவம், சந்திரகலையானது சத்தி ஆகையால், உலகமானது சத்தியை முதன்மையாக உடையது என்பது, குணங்குடியார், 'தாயாயுலகத்தை யீன்ற குணங்குடி தற்பரன்' என்பதனாலும் பரஞ்சோதி முனிவர், 'சத்தியாய்ச் சிவமாகி தனிப்பர முத்தியான முதலை' என்பதனாலும், திருமூலர் :— 'ஏறுதல் பூரகமீரெட்டு வாமத்தால்—வாமத்தி லீரெட்டு மாத்திரை பூரித்தே' என்பதனாலும்,

அகஸ்தியர் பூரண சூத்திரம்.

'ஏறுவாய் பிராணய வாசியேறும்
இடகலையாம் சந்திரனில் ஏறு ஏறு, என்பதனாலும்

பதஞ்சலியார்.

இடகலை யிற்றிகழ் கோடசந்தனை
ரவிகலை யிற்புக லாகவுஞ் செய
இருகலை யைத்திசை மாறி மாறியே—இதுபோல

இசையு மிகச்சனை பூரகந்தனில்
இருதொகை தப்பிவிடாமல் நின்றிடு
எழில்புருவச் சுழிமூல நாடியி—லிருநீயே. என்பதனாலும்

நன்குவிளங்குகிறது. ஆனதுபற்றியே வலது நாசியை முதன் முதற் கூறியிருக்கிறது.

உலகத்திலுள்ள பல சாத்திரங்களில் இரண்டொரு நூல் தவிர ஏனைய நூற்களில் இடது நாசியைச் சந்திரகலையென்றும், வலதுநாசியைச் சூரியகலையென்றும் கூறியிருக்கும். இவற்றை இங்கு மாறுதலாகக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

உம் சிவயவசி என்பதையாவது இருதலை மாணிக்கமும் காரண பஞ்சாட்சரமுமாகிய ஓம் அம் உம் சிவயவசி என்பதையாவது பின்வரும் அம்சகாயத்திரியும் அசபாமந்திரமுமாகிய 'அம்ஸ்ஸ் ஸோகம், ஸோகம்—அம்ஸம்' என்னும் சோகப் பிரணவத்தை யாவது

"ஓம்பூ: ஓம்புவ: ஓம்ஸுவ: ஓம்மஹ: ஓம்ஜந: ஓம்தப:
ஓம்ஸத்யம், ஓம்தத்ஸ, விதுர்வரேண்யம், பர்கோதேவஸ்ய
திமஹிதியோயோந: ப்ரஜோதயாத் ஓமாபோஜ்யோதி
ரஸோ மிருதம் பிரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்.

என்னும் பிராணயாம காயத்திரியையாவது செபியாமல் செபிக்க வேண்டும்.

அங்குலியால்மூடி முறையாலிரேசிக்கில்
பொங்குமாம்பூரகத்தினுள். (ஔவைக்குறள்).

சொல்லுமெனக்கேட்டுவந்தமாணாக்காவுன்
தூலகாரணப்பிரமந்துரியாதீதம்
அல்லுமல்லபகலுமல்லநிட்களங்கம்
அம்ஸஸ்ஸோகம்அசபாமந்த்ரத்தியானம்
சொல்லுமவனேநானென்றபிமானிக்கும்
சித்தவிர்த்தி நிரோதகமாம் யோகத்தாலே
வெல்லறிஞர்பலபோகவிர்த்தியோகி
விவேகதியானுதிகளேமேலாம்பிரம்மம்.

பிராணயாம காயத்திரியாதிகளைத் தியானிக்கும்போது இடையில் எந்த முகாந்தரத்தைக்கொண்டும் பேசவேகூடாது. பேசினால் தியானித்த செப முதலானவைகள் கைகூடாமல் கெட்டுப்போகும். ஆகையால் ஏகாக்கிரசித்தத்தோடே பஞ்சேந்திரியங்களையும் அடக்கிக்கொண்டுதான் எவ்விதத் தியானமும் புரிதல்வேண்டும். இதற்கு மாறாகச் சிலர் ஆறு, குளங்களில் சந்தியாவந்தன முதலானவைகள் செய்யும்போதும் இடைக்கிடையே பேசிக்கொள்ளுகிறார்கள்.

ஒருநாள் ஒரு ஊரில் பிராமண வருணத்தவர் காலைச் சந்தியாவந்தனஞ் செய்ய ஆரம்பித்து அருகாண்மையிலுள்ள

கோயிற் குளத்தின் படித்துறையிலிறங்கி மூக்கைப் பிடித்துக் கொண்டு நான்கு திக்கையும் பார்த்தவண்ணமாக காயத்திரி செபம் செய்தார். அந்தக் குளத்தின் வடகரையில் சிவன் கோயிலும் பெருமாள்கோயிலும் சேர்ந்த ஒருகோயிலும், அதற் கெதிரில் தென்னந்தோப்பும் இருந்தது. அந்தத் தோப்பிலிருந்து ஒரு தென்னைமட்டை விழுந்தது. அதைக்கண்ட ஷை பிராமணர் ஓம் பூ: ஓம்புவ: ஓம்ஸுவ: ஓம்மஹ: ஓம்ஜந: ஓம்தப: என்று மூணு மூணுத்துக்கொண்டிருக்கும்போதே அடே! கிட்டு! அந்த மரத்திலிருந்து ஒரு மட்டை விழுந்திருக் கிறது சீக்கிரம் ஓடிப்போய் எடுக்கச்சொல் யாராவது பறைப்பயல் எடுத்துக்கொண்டு போய்விடுவான் சீக்கிரம்! சீக்கி ரம்!! என்று பரபரப்புடன் சொல்லிவிட்டு

ஓம்ஸத்யம், ஓம்தத்ஸவிதுர்வரேண்யம், ப்ர்கோதேவஸ்ய
தீமஹீதீயோயோந: பிரஜோதயாத் ஓமாபோஜ்யோதீ
ரஸோமிருதம் பிரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்

என்று செபித்துவிட்டு அங்கநியாசம் கரநியாசம் செய்ய ஆரம் பித்தனர்.

சிலர் சந்தியாவந்தனம் புரியும்போது கதைகாரியங்களைக் கூடப் பேசிமுடிக்கின்றனர். இவ்விதமாக செபஞ் செய்பவர் கள் ஷை செபதபாதிகளைப் பரிகாசஞ் செய்பவர்களேயன்றி வேறில்லை.

குறிப்பு:—இருக்குவேதம் 3-வது மண்டலம் 62—11-லும் பிரஹ தாரணிய உபநிஷத்து 5-வது அத்தியாயம் 14-வது பிரிவிலும் கூறப்பெற்றுள்ள காயத்திரியானது சூரியனை நாடிச்செய்யும் பிரார்த்தனை என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அதிலிரு க்கும் ஸவித்ரு என்னும் பதத்திற்கு சூரியன் என்னும் பொருள் தந்து நிற்பினும் பரப்பிரமத்துக்கு இடப்பெற்ற பல பெயர்களில் அதுவும் ஒன்றேயாம். அதாவது ஸவித்ரு என்றால் நாம முடையவன் என்பதாம் அன்றியும் ஸவித்ரு என்பது சூரியன்

தான் என்று நிச்சயித்தாலும் *பிராகிருதமாகிய சூரியன் பிரகா சித்தால் பிரபஞ்சத்தின் இருள் நீங்குவதுபோல அப்பிராகிருத மாகிய சிவான்மை மூடும் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தை நீக்க ஞானசூரியனாக விளங்கும். ஸவித்ரு நாமமுடைய பரமா த்துமா என்பதுதான் உண்மையான பொருள்.

மந்திரதியானத்தோடு செய்கிற சுவாசபந்தத்திற்குக் கருப்பப்பிராணாயாமம் எனவும், மந்திரதியானமின்றிச் செய்யும் சுவாசபந்தத்திற்குக் கருப்பமில் பிராணாயாமம் எனவும், இவை முறையே சகற்பம் எனவும் அகற்பம் எனவும் பெயர்பெறும்.

வாயுசங்கிதை.

கொடித்தலோர்மாத்திரைவாறவல்கருப்பப்பிராணாயாமந்தானேக்கி[தும்
யெடுத்தமறைமந்திரத்தைவின்றுமுயர்பொருளையுளத்தெண்ணியோர்ந்
தொடுத்தியற்றலாகுமால்மந்திரத்தினொடுசொன்னதியானந்தன்னை
விடுத்தியற்றல்கருப்பமிலாப்பிராணாயாமந்தெரியவிளம்புங்காலே.

இலிங்கபுராணம்.

தெரித்தமறைமந்திரமோதிச்செய்யும்பிராணாயாமத்தைக்
கருப்பப்பிராணாயாமமெனக்கற்றல்செய்வார்காசின்றி
யுரைத்ததனிமந்திரமுள்ளத்துணராதியற்றுகின்றதனை
விரித்தார்கருப்பமிலதாயபிராணாயாமமெனமிக்கோர்.

பிறர் கேட்கும்படியாவது வாயில் முணுமுணுத்தாவது செபிக்கக்கூடாது. மனதிற்குள் செபியாமல் செபித்தல் உத்தமம். பிறர்க்குக் கேட்காதபடி உதடுகள் படபடவென்று அடித் துக்கொள்ளும்படி வாயில் முணுமுணுத்தல் மத்திமம். எல் லோர்க்கும் கேட்கும்படி பேரோலமிட்டுச் செபித்தல் அதமம். இவை முறையே மானசம்—உபாஞ்சு—வாசகம் எனப் பெயர் பெறும்.

---

* பிராகிருதம்—அழியத்தக்கது.

### வாயுசங்கிதை.

உன்னியேஉளத்தினிற்செபித்தல்உத்தமம்
மன்னுவோர்கேட்டிடாவகைசெபித்திடல்
முன்னிடின்மத்திமமுழங்கவோதியே
அன்னதுசெபித்திடல்அதமமாகுமால்.

### உருத்திராக்கவிசிட்டம்.

மானதந்தான்முத்திக்காம்புத்திமுத்திக்காமந்தம்
ஏனையொவிருத்திரங்களெட்டினுக்காம்—மானதத்தை
ஓதுசமேலேற்றிவடமற்றையொலிமந்திமிவை
யோதுகவீழோடவடமோர்ந்து.

இங்ஙனமின்றி, வேறெவ்விதமாகவேனும் அவரவர்களுக்குத் தத்தம் குருமூர்த்திகள் உபதேசித்தவாறு தியானத்தோடேனும் தியானமில்லாமலேனும் சுவாசத்தை யிழுத்துப் பூரித்துவிழுங்கவேண்டும். அதேமூச்சில் மறுபடியும் சுவாசத்தை வயிறுநிரம்புகிறவரையில் முன்போல இழுத்து விழுங்கவேண்டும். அப்படி விழுங்கிய சுவாசம் வெளியிற் சென்றுவிடாதபடி கண்டத்தை அழுத்திக் கும்பகம் செய்யவேண்டும். வாயுவானது வெளியிற் சென்றுவிடுமே யென்று கருதிப் பலவந்தத்துடன் ஒருபோதும் கும்பிக்கப்படாது. அப்படி கும்பித்தால் கனல் அதிகரிக்கும். ஆகையால் கூடியவரையிலும் நிதானமாகவே கும்பகம் செய்து சூரியகலையாகிய இடதுநாசியால் மெல்லமெல்ல இரேசிக்கவேண்டும். எந்த நாசியால் இரேசகம் செய்யப்பட்டதோ, அந்தநாசியாலேயே பூரகமும் செய்யவேண்டும். ஆனல் சரீரத்தில் வியர்வையுண்டாகும்வரையில் கும்பிக்கவேண்டும்.

### வாயுசங்கிதை.

அன்னஇரேசகத்தோடுபூரகங்கும்பகமென்னவடைவின்மூன்றும்
உன்னிலிரேசகம்விரலாலோர்பாஞுசியைப்பொத்தியோர்பாஞுசி
தன்னின்மூச்சினைவிடுதலாகுமாலதைப்பொத்தித்தகைமைசால
மன்னுமற்றைநாசியினுல்மூச்சேற்றல்பூரகமாம்வருக்குங்காலே,

### திருமந்திரம்.

சத்தியார்கோயிலிடவலஞ்சாதித்தால்
மத்தியானத்திலேவாக்கியம்கேட்கலாம்
நித்தித்தகூத்தும்சிவனும்வெளிப்படும்
சத்தியம்சொன்னோம்சதாநந்தியாணையே.

### ஔவைக்குறள்.

இடைபிங்கலைகளிரேசகமாற்றில்
அடையும்அரனாருள்.

சில அப்பியாசிகள் தியானம் வேண்டியதேயில்லையென்று சொன்னாலும் சொல்வார்கள். அது அவரவர்களுடைய அநுபவம். அதற்காக மற்றோர் அப்பியாசி தியானத்தை அடியோடு விட்டுவிடக்கூடாது. ஒருவர் சுபாபவத்திற்கு வேம்பு கரும்பு: மற்றொருவருக்குக் கரும்பு வேம்பு என்பது இங்கு கவனிக்க வேண்டியது. தியானத்தால் மாய்கை முதலிய ஆவரணங்களும் மனமும் அடங்கும். அதற்காகவே பலவித தியானங்களை ஆன்றோர் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

### கருவூரார்பூசாவிதி.

வாய்ச்சுதடாமனமடங்கவங்கென்றோர்சொல்
வாய்பேசாமவுனத்தையதிலேசேர்க்கக்
காய்ச்சுதடாபூத்தமலர்கருத்தையூணு
கனியாகுமக்கனியைக்கண்டுகொள்ளே.

### ஔவைக்குறள்.

தயாவினில் வாயு வலத்தி லியங்கில்
தியான சமாதிகள் செய்.

### சிவஞானவள்ளல்.

ஒருதலைமாணிக்கமுன்னரெனக்குபதேசஞ்செய்தான்
இருதலைமாணிக்கம்பின்னரும்பேசியிருளறுத்தான்
அரிதலைமற்றையயன்றலைசூடியகங்கையின்மூ
வெரிதலைச்சூலத்தொடேடிப்பான்கச்சியேகம்பனே.

ஔவைக்குறள்.

பேசாஎழுத்துடன்பேசும்எழுத்துறில்
ஆசான்பரநந்தியாம்.

குணங்குடிவள்ளல்.

'மாசறயாகூவென்றோதே' யென்றும்; 'வஞ்சகனும் உப தேசம் எங்கள் குணங்குடி வள்ளலென்றோதுவனே' என்றும் கூறியுள்ளனர்.

ஒவ்வொரு அப்பியாசிக்கும் ஒவ்வொருவிதப் பழக்கம் உண்டு. அதற்காக ஒருவர் செய்வது சரியென்றும், மற்றொரு வர் செய்வது பிசகென்றும் சொல்வது தவறு.

கோரக்கனர்.

பூசையிலேவெகுகோடிபூசையப்பா
புகழானமந்திரமோகோடாகோடி.

## அப்பியாசம் செய்யுமிடம்.

யோகாப்பியாசம் செய்கிறவர்கள் எவ்விடத்திலிருந்து அப்பியாசித்தால் மனம் நிம்மதியாகவும் திருப்தியாகவும் இருக்குமோ அவ்விடத்திலிருந்து அப்பியாசம் செய்யவேண் டியது. துர்க்கந்தமும் வெப்பமும் சுத்திசெய்யப்படாததுமான விடத்தில் அப்பியாசிக்கின் மனதில் மாசுண்டாகும்; கடவுளி டத்திலும் சரிவரச்சிந்தனை செல்லாது. எந்தவிடம் ஏகாந்தமும் பரிசுத்தமும் சுத்திசெய்யப்பட்டும்; கூறைவேய்ந்தும், பசும் புற்கள் புட்பச்செடிகளால் நிறைந்து அலங்காரமாகக் காணப் பட்டும்; குளிர்ச்சியாயும் நல்ல தடாகங்கள், நீர் ஊற்றுக்கள் சமீபித்ததாயும்; பட்சிகளின் இனிய ஓசைகள் கேட்கப்படுவ தாயும் இருக்கிறதோ அந்த இடம் மனதையும் பரிசுத்தமாக்கக் கூடும். ஊதுவத்தி முதலான சுகந்தங்கள் இருப்பின், சிலருக்கு மனம் நிம்மதியாயிருக்கும். சுருக்கிச்சொல்லுமிடத்தில் எந்த இடம் கருத்துக்கு இரமணீகரமாகவும், பரிசுத்தமாகவும் தோற் றப்படுகிறதோ, அந்த இடமே உபாசனை முதலிய நற்கருமங் கள் புரிவதற்கு ஏற்றவிடமாகும்.

## அப்பியாச கணக்கு.

சுவாச அப்பியாசமானது நாளுக்கு நாள் விருத்தியாகி வருகிறதைக் கவனித்தற் பொருட்டு, ஓம் என்னும் பிரணவத்தை மனதினால் அடிக்கடி நினைப்பதற்குப் பதிலாக, சில சமயங்களில் பரீட்சா நிமித்தம் தன்கை விரல்களை ஒவ்வொன்றாக விட்டு ஐந்தைந்தாய்க் கணக்கெடுப்பதும் உண்டு. ஆனால் சுவாச மாத்திரை அளவின்படி கணக்கெடுப்பதே மேலானதென்று புலப்படுகின்றது. அதாவது சுமார் இரண்டு நாழிகை நேரம் அப்பியாசம் செய்வதில், மனமானது எவ்வளவு நேரம் ஏகாக்ர சித்தமாயிருந்ததோ, அவ்வளவு நேரந்தான் பிராணாயாம மாத்திரையாகும். ஆனால், மாத்திரை அளவை ஒரு உத்தேசமாய் இவ்வளவு நேரந்தான் அனுட்டித்திருப்போம் என்று முடிவில் நிதானிக்க வேண்டுமேயன்றி, அப்பியாசத்தின்போது சிந்திக்கப்படாது. அங்ஙனம் சிந்திக்கின், மனமானது பகிர்முகத்திற் சென்றுவிடும். அதனால் அப்பியாச பங்கமுண்டாகும். இந்த வசனத்தை அப்பியாசிகள், எல்லா வசனத்திற்கும் முதன்மையாகக் கருதவேண்டும். கைவிரல்களால் கணக்கெடுப்பதைப் பார்க்கிலும், தற்கால நாகரீகத்தின்படி செக்கண்டு கடியாரம் வைத்துக் கணக்கெடுப்பது நன்மையாம்.

இவ்விதம் அப்பியாச ஆரம்பத்தில் மாத்திரம் ஐந்து பிராணாயாமம் ஆயிற்றென்பதைக் கணக்கெடுத்தற் பொருட்டு, ஒவ்வொரு பிராணாயாமம் முடிந்தவுடன் வலதுகையின் ஒவ்வொரு விரலையும் விட்டு, ஐந்து விரலையும் விட்டானபின் ஐந்து பிராணாயாமம் ஆயிற்றென்பதைக் காண்பிக்க, இடது கையின் ஒரு விரலை நீட்டவேண்டும். அதனால் இடது கையின் (4) விரல்களையும் விட்டால் (20) பிராணாயாமம் ஆயிற்றென்பதைக் காண்பிக்கிறது. அது இருபது என்பதை மனதிலாவது அல்லது எழுதிவைத்தாவது கணக்கிட்டு, இப்படி நான்குமுறை செய்ய (80) பிராணாயாமங்களாகும். இந்தப்படி (80) பிராணாயாமங்களாகும்வரையில் கும்பகம் செய்யச் சக்தி

வந்தபின், இடது அல்லது வலது ஆட்காட்டி விரலால் இடது நாசியைமூடி வாயையும்மூடி கடைவாய்ப் பற்களையும் இறுக்கிக் கொண்டு, வலது நாசியின் வழியாக நாலங்குலம் கணக்காக இரேசித்து, மறுபடியும் வலதுநாசியின்வழியாகவே நாலங்குலம் சுவாசத்தை மேலே இழுத்து, அதன்பின் வலதுநாசியை மூடிக் கொண்டு இடதுநாசியில் நாலங்குலம் ஓடவிட்டு, மறுபடியும் நாலங்குல சுவாசத்தை இடதுநாசியால் இழுத்து இடதுநாசியை மூடிக்கொண்டு, வலதுநாசியில் நாலங்குல சுவாசம் விடவேண்டியது. இவ்வாறு அடிக்கடி நாசிகளை மூடி மூடி சுவாசத்தையும் அடிக்கடி மாற்றி அந்தச் சுவாசத்தின் வேகம் அடங்குகிற வரையில் சுமார் (5) நிமிடம் ஓடவிட்டுக்கொண்டேயிருந்து, வேகம் அடங்கியபின் கையை எடுத்துவிட்டு எவ்வித சங்கற்ப விகற்பங்களும் எவ்வித மந்திரத் தியானங்களும் எவ்வித நினைப்புமில்லாமல் ஏகாக்ர சித்தத்துடன், 10 அல்லது 5 நிமிடம் வரையிலாவது நிட்டைசாதித்து, மறுபடியும் மேற்கூறியது போல் வலதுநாசியான சந்திரகலையின் சுவாசத்தை இழுத்து அப்பியாசம் செய்யவேண்டும். மறுபடி 5 நிமிடம் நிட்டை சாதிக்கவேண்டும். இதுவே அசம்பிரக்ஞாதசமாதியின் அறிகுறியாகும்.

**பதஞ்சலியார்**

இடகலை யிற்றிகழ் சோடசந்தனை
ரவிகலையிற் புகலாகவுஞ் செய

என்று முற்கூறியுள்ளதை இங்கு சிந்திக்கத்தக்கதே.

கண்டத்தை இறுக்கிப் பற்களை நெருக்கிச் சுவாசத்தை விட்டு அப்பியாசம் செய்துவருகையில் சாதகமுதிர்ச்சியினால் சிரசை நடுக்கும். புருவமத்தியில் மின்னற்கொடிபோல் பளீர் பளீர் என்றுஒருசோதிதோன்றும். அந்தசோதியானது, இரேசகம் செய்தசுவாசத்தின்வேகம் (கதி) அடங்குகிறவரையில்பளீர் பளீர் என்றுதோன்றிக்கொண்டிருக்கும். அப்பியாசம்முதிர்ச்சியாகிக்கொண்டு வரவர, அந்தசோதியை நினைத்தபோதெல்லாம் அநுபவத்திற்காணலாம்.

## நெஞ்சறி விளக்கம்

ஒருபாதந் தன்னைத் தூக்கி யொருபாதந் தன்னை மாற்றி
இருபாதம் ஆடு கின்ற இயல்பைநீ யறிந்தா யானல்
குருபாத மென்று கூறுங் குறிப்புனக் குள்ளே யாச்சு
வருபாத நாகை நாதர் மலரடி காண்பாய் நெஞ்சே

## கோங்கணர் கடைக்காண்டம்

மேவியேகண்மூடியிருக்கிப்பாரு
மின்னொளிபோற்காணுமங்கேநந்திமூலம்
தாவியேகும்பகஞ்செய்மாத்திரைக்குத்
தருகாதேஓங்அங்யநமசியென்று
கூவியேநாலுதாங்கும்பித்தற்பின்
கூசாமற்பிங்கலையில்ரேசகஞ்செய்
சேவியேஓங்சிங்கவநயாவென்று
செப்பொருக்கால்மாத்திரைசீராகுந்தானே.

இவ்வித அப்பியாசம் நன்ருய்க் கைகூடியபின், இரண்டுநாசிகளின்சுவாசத்தையும் உள்ளுக்கிழுத்து, வலது அல்லது இடது கைப்பெருவிரல் ஆள்காட்டிவிரல்களால் இரண்டுநாசித்துவாரங்களையும்மூடி, மறுபடி இடதுநாசியைத்திறந்து கொஞ்சம்சுவாசத்தை உள்ளுக்கிழுத்து விரல்களால் முன்போல்மூடி, திரும்பவும்வலதுநாசியைத்திறந்து கொஞ்சம்சுவாசத்தைஉள்ளுக்கிழுத்து விரல்களால்மூடி, இப்படிஎத்தனைதடவையானலும் நாசிகளைத்திறந்துதிறந்து சுவாசத்தை இழுத்துஇழுத்துமூடி, எவ்வளவுசுவாசம் வயிற்றுக்குள் கொள்கிறதோ அவ்வளவுசுவாசத்தையும் வயிறுநிரம்பஇழுத்து ஒருநாழிகை (24 நிமிட) நேரத்திற்குக் குறையாமல் ஒவ்வொருவேளையும் அப்பியாசிக்கவேண்டும். இப்படி நாசியைமாற்றி மாற்றிச் செய்வதால், சூரியகலையும் சந்திரகலையுமாகிய இரவியும் மதியும் ஒன்ருகி எப்போதும் இரவிகலையாகவே யிருக்கும். அப்படியானல் ஒருகாலத்திலும் எமனுடைய பயமேயில்லை.

## ஞானவெட்டி

மதிரவியும் ஒன்ருகில் மாளுவதேன் மாள்வதில்லை
விதியிருந்தோர்க் கெய்துமிது வித்தைதனு லாவதென்ன
அதிசயமதாலபிக்கும் ஆண்பிறவிநீயானல்
கெதிமோட்ச சற்குருவின் கிருபைஅனுக்கிரகமதே

ஔவைக் குறள்

1 சத்தியாஞ் சந்திரனைச் செங்கதிரோ னூடுருவில்; முத்திக்கு மூலமது
2 அயனங்சொள் சந்திரனல் ஆதித்தனென்றில் நயனமாமுத்திக்குவீடு

திருமந்திரம்

தக்க இடம் வலம் நாழிகை சாதிக்கில்

பதஞ்சலியார்

வகரமிறுக்கிப் பிடர்க்குளே யொரு
மனதை யுறைத்துச் சுருக்கமாய் நெடு
மதியை வலத்தில் திருப்பியே விடு — மறவாமல்

மணிரவியுச்சிக் குழிக்குளே நடு
சுழியினில் வைத்துத் துலக்கமாய் நிதம்
மவுனபதத்தேச் சரிக்கையா யிரு — மலைபோலே

புருவ மெனுஞ் சுழி யூடே சார்வையும்
வலமிட முஞ்செய வேதான் வாயுவை
புரையுள தெங்கனல் மேலே தேடிய — பதியோராய்

புசியமு தஞ்சிர சூடே நாடியில்
ஒழுகி வரும்படி யாமே தாரணை
புரியமுதம் பெறவேதான் ரேசக — புணர்வாகும்.

ஆகாயத்திலுள்ள சந்திரன் தேய்ந்து தேய்ந்து போவதுபோல் மனிதனுக்குள் இருக்கும் சந்திரனும் தேய்ந்து, ஆயுளைக் குறைக்கின்றது. சந்திரனைத் தேயவிடாமல் சூரியனோடு ஒன்றுபடுத்திவிட்டால், சூரியன் வளர்தலும் தேய்தலுமில்லாதது போல், மனிதனுடைய ஆயுளும் கூடுதல் குறைதலின்றி என்றும் ஒரேபடித்தாக இருக்கும்.

நெஞ்சறி விளக்கம்

வான்மதியிரவியுன்றன் வயதெலாங் கொடுபோகின்றான்
தானதை யறிந்திடாமல் தரணியிலிருப்போ மென்றே
ஊனமாமுடலை நம்பி யுண்மைகெட்டலைந்தாய் நீமெய்ஞ்
ஞானமேபொருளாம் நாகை நாதரைத் தொழுவாய் நெஞ்சே

## அப்பியாச முறை

கொழுப்பும் கோழையும் அதிகமாயுள்ள சரீரிகள், காலையில் (4) மணிக்கே படுக்கையை விட்டெழுந்து, இதன்பின் கூறப்பெற்றுள்ள கிரியைகளின்படி கப-மல-சலாதிகளைக் கழித்துச்சுத்தம் செய்துவிட்டு, பதுமாசனத்திலாவது சுகாசனத்திலாவது இருந்துகொண்டு, அவரவர்களுக்கு இஷ்டமான தெய்வங்களையும் மகான்களையும் அரூபமாக நினைந்து, 'நான் ஆரம்பிக்கிற இந்தக் காரியத்தை எவ்வித விக்கினமும் வராமல் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும்' என்று மனமுருகித் தியானித்து, அதன் பின்னரே அப்பியாசம் தொடங்கவேண்டும்.

யோகசாதனை செய்யமுயலும் ஒவ்வொரு அப்பியாசிகளுக்கும் கபமானதுகாலனைப்போல் விரோதியாம். இதுகண்டத்தை இருப்பிடமாகக் கொண்டு நாபிமுதல் வயிறு, மார்பு, கபாலக்குகரம் வரையில் வியாபித்து நிற்கும். இக்கபமானது நீர்க்கோர்வையால் ( ஜலதோஷம் ) விருத்தியாகிச் சில சமயங்களில் இருமலும், மூக்கடைப்பு, மாரடைப்பு, சுரம்முதலிய அபாயமான வியாதிகளை உண்டுபண்ணி மிகவும் கஷ்டத்தை அளிக்கிறபடியால் அக்காலத்தில் யோகாப்பியாசம் செய்யச்சாத்தியப்படாது. ஒருக்கால் செய்யப்பெறினும், அது வீண்பிரயாசையேயாம். மேலும், இந்தக்கபதோட முதிர்ச்சியால் நரைதிரையாதிகள் உண்டாகிறதென யோகநூற்கள் கூறுகின்றன.

யோகத்தில் சிறிது அனுபவம் அடைந்தவர்களையுங்கூட, கபதோடமானது ஒவ்வொருசமயம் வாதிக்கின்றது என்றால், ஆரம்ப அப்பியாசிகளைப்பற்றிக் கேட்பானேன்? ஆகையால் இக்கபதோடத்தை அவசியம் நிவர்த்திக்கப் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

மலசலாதிகளைக் கழிக்காமல் அப்பியாசம் செய்தால், அப்பியாசமானதுநாளுக்குநாள் பூர்வபட்சத்துச்சந்திரன்போல் விருத்தியாகி வருவதால், கும்பித்தவாயுவானது வயிற்றுக்குள் பிரவேசித்துமேலுங்கீழுமாக ஏறியிறங்கிக்கொண்டு, மலசலாதிகளை

வெளியேற்றும். அதனால் அப்பியாச பங்கம் உண்டாகும். ஆகலின் மலமூத்திராதிகளை நிவர்த்தி செய்தபிறகே பிராணாயாம அப்பியாசம் தொடங்கவேண்டும்.

N. B. இதன் முழுவிபரங்களை இப்பத்திரிகாசிரியர் இயற்றிய யோகரகசியம் என்னும் முழுப்புத்தகத்தில் விரிவாய்க்காணலாம்

யோகரகசியம்.

## சாதிமத சங்கடம்.

### விருத்தம்.

பேதாபேதந்தனைத்தொழிலாய்ப்பிதற்றித்திரியும்பேயருக்கே
சாதிமதச்சங்கடமதனைச்சாற்றிவைத்தார்முன்னோர்கள்
பேதாபேதந்தணந்துயர்ந்தபெரியோர்க்குரைத்ததன்றெனவே
நீதில்முதியோர்நவின்றதனைத்தெளிவுபெறுமாறுரைத்திடுவாம்.

பற்பல சாதிவித்தியாசங்களையும் மதபேதங்களையும்பிரபஞ்சத்தார்களாகிய அந்தகர்கள், ஒருவர்க்கொருவர் முட்டிக்கொண்டு தட்டுக்கெட்டுத் தடுமாறுதிருப்பதற்காகவே அறிவுடைய நமது முன்னோர்கள் ஏற்படுத்திய (நல்வழிபாகிய) ஓர் பெரிய சட்டமாகும்.

### திருக்குறள்.

சுவையொளியூறோசைநாற்றமிவ்வைந்தின்
வகைதெரிவான் கட்டேயுலகு.

அஃதேயன்றி ஞான நேத்திரமுடைய அறிவுடையோர்களுக்காகச் சொன்னதேயன்று. பொன்னுக்குப்பொன்னாபரணமிட்டு அலங்கரித்துப்பார்க்க எவரும் விரும்புவதில்லை. எல்லாவற்றையும் பார்த்து மகிழும் கண்ணுக்கு ஆபரணமிட்டு அலங்கரிப்பதில்லை. அதுபோல் அறிவுடையோர்களுக்கு அறிவுடையோர் சட்டம் வகுப்பதேயில்லை. நமது அரசாங்கத்தார், சிவில், கிரிமினல் முதலிய நியாய (court) ஸ்தலங்களை ஏற்

படுத்தி வகுத்து வைத்திருக்கின்றனர். அதில் என்னுடைய நிலம், உன்னுடைய நிலம் என்று வாய்த்தர்க்கம் பேசுபவர்கள் தெரிவித்துக்கொள்ள சிவில் கோர்ட்டென்னும் நியாய ஸ்தலங்களையும், தர்க்கம் முதிர்ந்து அடிபிடி சண்டைகள் உண்டாகி மண்டையுடைந்துபோகிறவர்களையும் வேறெவ்விதத் துன்மார்க்கமான கலகங்கள் செய்கிறவர்களையும் தண்டிப்பதற்குப் போலீஸ் முதலிய கிரிமினல் நியாயஸ்தலங்களையும், அவிவேகிகளாகிய கலகக்காரர்களுக்கென்று ஆலோசித்து ஏற்படுத்தியதேயன்றி, உள்ளதை உள்ளதுபோல் பாவிக்கும் அறிவுடையவர்களுக்கு ஏற்படுத்தியதன்று, அதுபோல் சாதிவிகற்பங்கள், மதவிகற்பங்கள் முதலிய சங்கடங்களைப், பேராசைப் பேய்பிடித்தாடும் பிரபஞ்சத்தவர்களாகிய சமயத்தவர்கள் வரன்முறை தவறாமல் ஒருவர்க்கொருவர் கட்டுப்பட்டு நடந்துகொள்வதற்காக அறிவுடையோர்களால் ஏற்படுத்திய ஓர் வரம்பேயன்றி, சமயங்கடந்த மோனசமரசமுடைய மகான்களுக்குஞ் சேர்த்து ஏற்படுத்தியதல்ல.

சாதிமதச் சங்கடம் என்னும் விருட்சமானது, முளையாயிருந்து நாளுக்குநாள் தடித்துப் பெரிய ஆலவிருட்சமாகிவிட்டது. அதைப் பெயர்ப்பதென்றால் சிறிய அரிவாள் போன்ற முயற்சியால் ஒருபோதும் முடியாது. பெரியவாள், கோடரி போன்ற அரும்பெரு முயற்சியாலும் அதன்நிலையை விட்டுப் பெயர்ப்பது மஹா அருமை. ஆகையால் சாதுசங்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் உயர்குலத்தினர். மாதுசங்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் தாழ்ந்தகுலத்தினர். இந்தச்சாதியிரண்டொழிய வேறில்லை. இதற்கு அப்பாலுமில்லை. இதுவே வேதாந்தத் துரைத்தனத்தாருடைய முடிவானசட்டம் (Rule).

**திருவருட்பிரகாசவள்ளல்.**

நரைமரணமூப்பறியாநல்லவுடம்பினரே
நற்குலத்தாரெனஅறியீர்நானிலத்திர்நீவிர்
வரையிலுயர்குலமென்றுந்தாழ்ந்தகுலமென்றும்
வகுக்கின்றீர்இருகுலமும்மாண்டிடக்காண்கின்றீர்

புரையுறு நற்குலங்களெல்லாம்புழுக்குலமென்றறிந்தே
புத்தமுதமுண்டோங்கும்புனிதகுலம்பெறவே
உரைபெறுமென்றனித்தந்தைவருகின்றதருணம்
உற்றதிவணுற்றிடுவீர்உண்மையுரைத்தேனே.

கூத்தில் அரசவேடம் புனைந்தவர்கள், உண்மையான அரசனைப்போல், இரத, கஜ துரக, பதாதிகள் என்னும் நால் வகையான சைனியங்களும் சூழ அரசாட்சிசெய்து துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம்புரிந்து, வேண்டுவார்க்கு வேண்டுவனவாகிய நாடுநகரங்களைச் சர்வமானியமாகப் பூதானம்செய்யமுடியாது. அதுபோல் உயர்ந்தவர்களைப்போல் பல அறிகுறிகளைத் தரித் திருக்கும் வேடதாரிகள், பெரியோர்களைப்போல் ஒன்றுமே செய்யமுடியாது.

திருக்குறள்.

செயற்கரியசெய்வார்பெரியோர்சிறியர்
செயற்கரியசெய்கலாதார்

ஆகையால் மகான்களுக்கு மாத்திரம் சாதிபேதமில்லை. மற்றவர்களுக்குச் சாதிபேதம் வேண்டியதே என்று வியாசர் முதலிய பெரியோர்கள் செய்துவைத்ததே சரியானதாகும். நாம் கலிகால விபரீதப்புத்திக்குத் தக்கபடி, முன்னுள்ள பெரி யோர்கள் அறிவில்லாமல்சாதிமத பேதங்களைவகுத்து விட்டனர் என்றெண்ணுவது பெருந்தவறு. ஆனால் போலியாக ஏற்படுத்தி யுள்ள சாதிமதச் சங்கடத்தை இக்காலத்துள்ள சில மூடர்கள் அதைப் போலியென்று உணராமல் உண்மையான மோட்சத் திற்கு இதுவும் ஒரு சிறந்தவழிதான் என்று கருதி, 'கண்ணு டைய ரென்பவர் கற்றோர்' என்னும் ஆன்றோர் வசனத்தை மறந்து, கற்றோர்கட்கும் சாதிநிரூபித்து அடுப்பங்கரைக்குள் சாப்பிட்டுவிட்டால் மோட்சம் கிடைத்துவிடும் என்று நினைக் கின்ற இக்கலிகாலத்தில் சாதியென்பது தொலைந்துபோனாலும் மிகவும் நல்லதே, அன்றியும் சாதிசமயத்தடிப்பை மாற்றுவதற்

காக அரும்பெரும் முயற்சி செய்துவரும் சில தேசாபிமானி களின் பிரயாசையும் காலவிபரீதத்துக்குத் தக்கவாறு பயன்தரத் தக்கதேயாம். சாதித்தடிப்பையே மேலான சாயுச்சிய பதவி யாகக் கருதிக்கொண்டிருக்கும் அறிவிலிகள் வாயில் இன்னும் சில காலத்திற்குள் மண் விழுந்துவிடும் என்பதற்கு எவ்விதச் சந்தேகமுமில்லை.

ஒருவன் பக்தியாலல்லாது உயர்குலத்திற் பிறந்ததனு லேயே கடவுள் திருவருளுக்குப் பாத்திரனுக ஒருபோதும் முடியாது. பரமனது திருவருளுக்குப் பாத்திரமாகிறவர்கள் உயர்குலத்தார் என்றும் இழிகுலத்தார் என்றும் கிடையாது. எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும் மனத்தூய்மை யடைந்து கடவுளிடம் அன்புகொண்டவரே அவரது பேரருளுக்கு அருக ராவர். உயர்குலத்திற் பிறந்திருந்தாலும் மனத்தூய்மையும் கடவுள்மீது பக்தியும் ஒருவனுக்கு இல்லாவிடின், அவன் கடவுள் அநுக்கிரகத்திற்குப் பாத்திரனுகான். ஒருவன் அதிக இழிகுலமென்று கருதப்படும் குலத்திற் பிறந்திருந்தாலும் மனத்தூய்மையும் கடவுள்மீது பக்தியும் உடைத்தாயிருப்பானே யாகில் அவனே பரமகருணுநிதியாகிய கடவுள் அருளுக்கு உரியவனுவன். ஏகலைவன் என்பவனைச் சாதியில் நிஷேதனுக எண்ணப்பட்டாலும் அவனிடமிருந்த பக்தியினுலன்றோ? மேன் மையைப் பெற்றுன். பெத்தான் சாம்பானுக்கு முத்தி கொடுக் கும்படி கொற்றங்குடி உமாபதி சிவாசாரியருக்கு,

அடியார்க்கெளியன்சிற்றம்பலவன்கொற்றங்
குடியார்க்கெழுதியகைச்சீட்டு —படிமீதில்
பெத்தான்சாம்பானுக்குப்பேதமறத்தீக்கைசெய்து
முத்திகொடுக்கமுறை

என்னும் வெண்பாவை நடராசப்பெருமான் பாடிக்கொடுத்தது பெத்தான் என்னும் பக்தனுடைய குலத்தைப் பொருத்ததா? நந்தனர் நடராச தரிசனத்திற்காகக் கோவிலுக்கு வெளியில் காத்திருந்தும், நந்தி மறைத்திருந்ததினுல் தரிசனங் கிடைக்கப் பெருமல் ஏங்கியிருக்கும்போது,

பல்லவி.

சற்றேவிலகியிரும்பிள்ளாய் சன்னிதானம் மறைக்குதாம் (சற்)

அநுபல்லவி.

நற்றவம்புரியும் நம்முடையதிரு
நாளைப்போவார் வந்திருக்கிறார் (சற்)

என்று சிற்றம்பலவர் நந்தியை விலகிக்கொள்ளும்படி ஆக்கியாபித்தது நந்தனாரின் குலத்தைக்குறித்தா? அன்று; அவர்களது பேரன்பின் மகிமையினாலேயே. ஸ்ரீ காளத்தியப்பர் கிராதக குலத்தினராகிய ஸ்ரீ கண்ணப்பநாயனாரைத் தமது பேரருளுக்குப் பாத்திரனாக்கியது அவரது குலத்தினாலா? புராணங்களிற் சொல்லியிருக்கிறபடி மான்வயிற்றிற்பிறந்த கலைக்கோட்டுமகாமுனிவரும், பசுவின் வயிற்றிற்பிறந்த கௌதமமுனிவரும், நரியின் வயிற்றிற்பிறந்த சம்புகமுனிவரும், நாயின் வயிற்றிற்பிறந்த சவுனகமுனிவரும், கழுதை வயிற்றிற்பிறந்த கார்க்கேயமுனிவரும், கிளி வயிற்றிற்பிறந்த சுகமுனிவரும், கரிக்குருவியின் வயிற்றிற்பிறந்த பாரத்துவாசமுனிவரும் தவளையின் வயிற்றிற்பிறந்த மாண்டவியமுனிவரும், கலசத்திற்பிறந்த அகத்தியமாமுனிவரும், கைம்பெண் வயிற்றிற்பிறந்த கவுண்டன்னியமுனிவரும், சண்டாளப்பெண் பெற்ற சத்திமுனிவரும், புலைப்பெண்ணுக்கு பிறந்த பராசரமுனிவரும், வலைப்பெண்ணுக்குப் பிறந்த வியாசமுனிவரும், சக்கிலியப்பெண் பெற்ற மதங்கமுனிவரும், வண்ணாரப்பெண் பெற்ற நாரதமுனிவரும், வேடப்பெண் பெற்ற வான்மீகரும், அம்பட்டப்பெண் பெற்ற வபனமுனிவரும், தேவதாசியாகிய ஊர்வசிவயிற்றிற்பிறந்த வசிட்டமகாமுனிவரும் ஆகிய இவர்கள் பிரம்மரிஷிகளானதும்,

நாவிதராகிய கருவூராரும், பளிங்கசாதியிற்பிறந்த கொங்கணரும், சேணியராகிய சட்டமுனிவரும், குயவராகிய போகமுனிவரும், செட்டிகுலத்திற்பிறந்த சுந்தரானந்தரும், ஆதி

யென்னும் புலைச்சிவயிற்றிற் பிறந்த திருவள்ளுவர், கபிலர், ஒளவை முதலியோரும், செம்படவராகிய மச்சமுனிவரும், கன்னாரகுலத்திற் பிறந்த கமலமுனிவரும் யாதவகுலத்தின ராகிய இடைக்காடருமாகிய இவர்கள் எல்லாம்வல்ல சித்தர்க ளானதும் அவரவர்கள் குலத்தினலா? அன்று.

ஆகையால் ஒருவன் பக்திமார்க்கத்தை அடைய, அவனது சாதிகுலம் ஒருக்காலும் தடையாயிருப்பதில்லை. அவனது மனோநிலைமையே காரணமாயிருக்கிறது.

நீதிசாரம்.

ஜென்மனாஜாயதேசூத்திர:
கர்மணாஜாயதேத்விஜ.
வேதபாடாத்துவிப்ராணாம்
பிரமக்கியானந்துப்ராமண:

வேமன்னபத்தியம்.

அக்கியானமேசூத்திரத்துவமு
சக்கியானமேபிரம்மனுஸ்ருதலனுவினுரா
யக்கியானமுடிகிவால்மீகி
சுக்கியானபுபிரம்மமொாங்தேசூடரவேமா

(இ-ள்) அஞ்ஞானமே சூத்திரத்துவம். சூத்திரன் என்றால் பாமரன் என்பது பொருள். எவனுக்கு அஞ்ஞானம் நீங்க வில்லையோ அவனே சூத்திரனவான். பிரம்மக்கியானம் உள் ளவன் சூத்திரன் என்றழைக்கப்பட்டவனாயிருந்தாலும் பிரம்மக் கியானியேயாவன். வனவேடராகிய வான்மீகர் பிரம்மக்கியானம் அடைந்ததால் பிரம்மக்கியானி யென்று பேர்படைத்தார். மே குலத்தில் பிறந்தவனானாலும் சீவைக்கியசந்தானம் இல்லாதவ சூத்திரனேயாவன். (என்பதாம்)

கச்சலுகாமுலுகூடுக
திரச்சங்கராஜகமுபுட்டெ தரதலாடுன
இச்சடகுலசுண்டெவ்வடு
நச்சரிதமுஅந்தராணுசுசாடரவேமா.

(இ-ள்) சம்போகத்தினால் நாதவிந்துகூடி எல்லா மனிதர்களும் பிறந்திருக்கிறார்கள். அதில் உயர்குலமென்றும், தாழ்ந்தகுலமென்றும் வித்தியாசமேயில்லை. அப்படியிருக்க யோனிவழியே பிறந்தவர்களில் ஒருவர்க்கொருவர் பிரமக்கியான ஆத்தும சந்தான உயர்வு அடைந்திருந்தாலன்றி, பேதஞ்சொல்லிக்கொள்வதைப்போல் முழுமூடத்தனம் வேறேயில்லை. (என்பதாம்)

(ஞானக்களஞ்சியம்.)

# "ஞான சூரியன்" முக்கிய முடிவுரை.

அன்பார்ந்த சகோதர சகோதரிகாள்!

நமது ஞான சூரியன் சஞ்சிகையானது இந்தப் பிரசுரத்துடன் சம்பூரணமடைந்துவிட்டது. நாம் இப்பத்திரிகையை ஆரம்பிக்கும்போதே முதல் விளம்பரத்தில் எம்மாலியற்றிய வேதாந்த பாஸ்கரன், ஞானக்களஞ்சியம், யோக ரகசியம், பக்தி மகத்துவம் என்பது முதலான புத்தகங்களின் சாராம்சங்களிற்
சிலவற்றை வெளியிடுவதற்காகவே இப்பத்திரிகையை ஆரம்பிக்
ின்றோம் என்று விளம்பரஞ் செய்திருந்தோம். அதுபோலவே
டந்த 2 வருஷகாலமாகப் பிரசுரஞ்செய்தோம் இனிமேல்
தைப் பத்திரிகை ரூபமாகப் பிரசுரிக்காமல் இதன் மூலகாரண
ாகிய ௸ வேதாந்த பாஸ்கரன் முதலான நூற்களைப் புத்தக
ரூபமாக அச்சிட்டு வெளியிடுவதற்காக வேண்டிய முயற்சிகளைச்
சய்ய ஆரம்பித்துவிட்டோம். இனிமேல் வேதாந்தபாஸ்கரன்
ும் யோகரகசியம் முதலான நூற்கள் எப்போது
் என்று ஆவலோடு எதிர்பார்த்த பல்லாயிரம் அன்பர்
மார் 1925-௵ ஜனவரி-௴ க்குமேல் ௸ புத்தகங்

கள் அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும் என்பதை ஞாபகப் படுத்துகிறோம்.

இங்ஙனம்,

ஸ்ரீ கருணையானந்த ஞானபூபதி,

கருணாநிதி அச்சியந்திரசாலை,

விஜயபுரம், திருவாரூர் S. I. RY.

---

## பிரதம குருப்பிதா மஹாகுருவணக்கம்.

### அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

கத்துதிரைச் சலநிதிசூழ் புடவியிடைப் பலதவங்கள்
கருதி யாற்றிப்
பத்தியுட னடியேனைப் புத்திரனா கப்பயந்து
பலநூல் போதித்
தத்துவித வித்தையெனக் கறிவித்தந் நிலையிற்றா
னழுந்தி மாத
வத்திரஞ்சேர் அப்துர்றது மானெனுமெய்ஞ் ஞானிபதம்
வணங்கி வாழ்வாம்.

### எழுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

முத்தியின் மூவா வித்திஃ தெனவோர்
மொழிதனை மொழிந்துமெய்க் கலிமாத்
தத்துவ மசிவாக் யார்த்தம தான
தன்னையே பிரமமென் றுணரும்
புத்தியை எனக்குத் தந்திர மாகப்
புகட்டிய சற்குரு மணியாம்
சித்தர் அப்துல்றஹ்மா னொலி யவர்கள்
திருவடி சிரமிசை சேர்ப்பாம்.

# மவுலா இஸ்லாம்.

மவுலா இஸ்லாம் என்றால் உயர்ந்த இஸ்லாம் என்பது
றுள். அதாவது புறமதங்களிலிருந்து இஸ்லாமதத்தைத்
வியவர்கட்குப் பெயர். புறமதங்களிலிருந்து இஸ்லாத்தில் சேர்ந்தவர்களை "அல்லாமவுலா யாமவுலா" அதாவது அல்லா வுயர்ந்தவன் அதுபோல் புது இஸ்லாம் ஆனவர்களும் உயர்ந்தவர்கள் என்று வேதவசனங் குறிப்பிட்டு பெருமைபாராட்டிக் கொண்டாடப்பெற்று வருகிறது. இத்தகைய மகிமை இருந்ததனாலேயே அநேகர் இஸ்லாமானார்கள். இவர்கள் குறைவு நிறைவுகளை முற்காலத்தவர்கள் கவனித்ததுபோல் இக்காலத்தவர்கள் கவனிக்காததனாலேயே புதிதாக இஸ்லாமாகிறவர்கள் தொகை இந்த ஜில்லாவில் பூஜ்யமாகயிருக்கிறது ஏனென்றால் :—

பள்ளர், பறையர், சக்கிலியர், ஏகாலி, நாவிதர், மறவர், குறவர், தோட்டி, தொட்டியர், பிராமணர் வரையிலுள்ள சகல சாதிகளும் வந்து சேர்ந்துதான் இஸ்லாமதம் பெருகிற்று. இதன் விபரம் தீனெறிவிளக்கத்தில் விரிவாய்க் காணலாம்.

இஸ்லாமிய மதத்தின் அனேக அறிகுறிகளுட[illegible]
முஹம்மது நபி (சல்) அவர்கள் மட்டும்தான் பி[illegible]
அவர்கள் சிறியதகப்பனார் பாட்டன் முதலான[illegible]
[illegible] ஸ்தலம[illegible]
[illegible]ன்னும் [illegible]

பஞ்சம் பிழைக்கவந்த பாமரப்பாளையங்கள் ... ... ... ... .... கூடை முறம் கட்டுகிற குறவன்களுடன் குடி கட்டிக்கொண்டு பேருக்குமட்டும் நாங்களும் இஸ்லாமாக களே என்று பெருநாளென்று கேள்விப்பட்டால் லெப்பைக கூப்பிட்டுக் கோழி அறுத்துத் தின்னமாத்திரம் கற்றுக்கொ பள்ளிவாசலென்றால் பலம் என்னவில்லை எந்த மருந்துக்கடையி கிடைக்கும்என்கிற பரமசண்டாளர்களும் கிழமேல் திசையறியாக் கிடாக்கழுதைகளும் கலிமாச்சொல்லடி கதிஜா என்றால் ஐந்து(5) பிள்ளைகளுக்கும் தாயானேன் அந்த பலாயை நானறியேன் என்கிற தடிச்சிகளும் அக்கழுதையைக் கட்டிக்கொண்டழுகும் பேய்ப்பயல்களும் கூலிக்குக் குதிரை பிடிக்கிற இழிபயலுக்குப் பிறந்து மார்க்கத்துக்கு விரோதமாக செத்தமாட்டுத்தோல்வாங்கி உப்புவைத்துக் கருவாடு தூக்கி அலையும் கழுதைப்பயல் சிரிக்கி களும் தோப்பு இலுப்பைமரத்தின் கீழிருந்து தானாகவே புருஷன் சேகரித்துக்கொள்ள ஸனாவிற்பிறந்த நெடுங்கருங் குரங்குகளும் சக்கிலியர் பறையர் பள்ளர்களிலிருந்து இஸ்லாமாகி சென்மக்குணத்தைச் செருப்பால் அடித்தாலும்போமோ என்ற படி நாகரீகந்தங்கிய இக்காலத்திலும் பழைய ஜாதிக்குணம் போகாமல் கீழ்மக்களாகச் சண்டை சச்சரவு செய்து கொண்டு ... ரவிலும் வாய்நாறும் லவுண்டிகளும் பெண்டுகளை ... ாத பேடிப்பயலாகிய சும்பத்தடிப்பயல்களும் நடுத் ... இஸ்லாமானவர்களை குலம் குறித்துப் ... பாகிறதுப ... ளாகிறா...